
பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1–12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வருஷ வைகாசி-மீ 3-உ (16—5—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 3.



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப் பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப்பீசுகள் ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சுவேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100-க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும்முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிபோ, திருப்பூர், (தென் இந்தியா,)

---

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள் துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள். ஷர்ட்டிங், கோட்டிங், சால்வை தினுசுகள். கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும், தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராமசாமி அய்யர்,
ராம விலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ் ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால், கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

எஸ். ராமநாதன், காரியதரிசி கத்தர் இலாகா

---

## மூன்று மாதத்தில்
## மோட்டார் ஓட்ட கற்றுக்
## கொள்ளலாம்.

1916-வருஷ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும், வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும், எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

---

## காங்கிரஸ் அத்தாக்ஷி
## பெற்ற சுத்தகதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

---

## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

---

## கத்தர் வியாபாரிகளுக்கு
## அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

திருவாளர்கள்:—

1. R. K. சண்முகஞ் செட்டியார்.
2. T. A. இராலிங்கஞ் செட்டியார்.
3. V. C வெள்ளங்கிரி கவுண்டர்

## இவர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்.

கனவான்களே!

உள்ளூரிலிருக்கும் உங்களுக்குப் பத்திரிகை மூலமாய் ஒரு பகிரங்கக் கடிதம்எழுதி உங்கள் கொள்கைகளை வெளிப்படுத்தக்கேட்டுக்கொள்வதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். நீங்களும், காங்கிரஸ் பேராலேயோ, சுயராஜியக் கட்சிப்பேராலேயோ, ஜனங்களுக்குப்பெருத்த ஊழியம் செய்கிறோம்,அல்லது செய்யப்போகிறோம் என்று சொல்லுகிறீர்கள். அம்மாதிரியே சிலர் "ஜஸ்டிஸ்" கட்சிப்பேராலும்,சிலர் மிதவாதக்கட்சிப் பேராலும் அதே ஜனங்களுக்கு பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்ளலாம். ஆகையால், அந்தப் பொது ஜனங்களின் சார்பாக, இந்தப்பகிரங்கக் கடிதத்தை எழுதவேண்டியது அவசியமாகின்றது.

"ஜஸ்டிஸ்" கட்சியின் மூலமாகத்தான் தேசவாழ்விலும், சமூகத்துறையிலும், பார்ப்பனரல்லாத நாம் முன்னேற்றமடைய முடியும் என்பது என்னுடைய உண்மையான நம்பிக்கை. மேலும், எப்போதாவது நம் நாடு சுதந்திரமடைவதானால், அப்போது பார்ப்பனரல்லாத நம் சகோதரர்களுடைய தியாகத்தாலும், முயற்சியாலும்தான் சுதந்திரம் அடையமுடியும். அந்தக் காலத்தில் நேரிடும் கஷ்டத்திற்கும், தியாகத்திற்கும் நம் பார்ப்பனரல்லாத சகோதரர்கள்தான் தலை கொடுக்கப் போகிறார்கள் என்பதும் எனது துணிவு.

காங்கிரசில் எனக்கும் கொஞ்சகாலம் மோகமிருந்தது. இந்தக் காங்கிரஸின் முயற்சியால் நாடு சுதந்தரம் அடைவது மாத்திரமல்லாமல் நாட்டிலுள்ள பல்வேறு ஜாதியார்களும் மதஸ்தர்களும் சமத்துவமும், சம உரிமையும் அடையக்கூடும் என்று நம்பியிருந்தேன். ஆனால், காங்ரஸின் நடவடிக்கைகளைக் கவனித்து வர வர, எனக்கு அந்த நம்பிக்கை போய்விட்டது. தற்போதய நிலைமையில் காங்கிரஸானது பார்ப்பனருடைய ஆதிக்கத்திற்குட்பட்டு சாமான்ய ஜனங்களின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாயிருக்கிறது. அல்லாமலும் இப்போது ஓட்டு பெறுவதற்கோ அல்லது பணம் பெறுவதற்கோ, உபயோகப்படுத்தப்படுகிறது. இப்போதுள்ள நிலைமையில் காங்கிரஸ் கட்சி சுயராஜியக் கட்சி என்று பிரிவு இருப்பதாகத் தெரியவில்லை. சுயராஜியக் கட்சிதான் காங்கிரஸ். ஆகையால் காங்ரஸ் பார்ப்பனர் ஆதிக்கத்திற்குட்பட்டுப் போயிற்று என்று சொல்வதில் என்ன தடை? சுயராஜியக் கட்சி பார்ப்பனக்கட்சியாகாது என்று நீங்கள் மறுக்கலாம். ஆனால் திரு. விபினசந்திரபாலர் அவர்கள் சென்னைக்கு வந்து பார்த்துவிட்டுச் "சென்னையில் சுயராஜியக்கட்சி பார்ப்பனப் படையின் முன்னணி" என்று தெரிவித்தனர். நமது ஜில்லாவிலேயே ஒரு காலத்தில் தென்னாட்டுத் திலகர், அஞ்சா வீரர் என்று பார்ப்பனரும் அவர் பத்திரிகைகளும் புகழ்ந்து வந்த திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரும், திரு. பாலரைப்போலவே, சுயராஜியக் கட்சி பார்ப்பனர் கட்சி என்று தீர்மானமாகச் சொல்லுகிறார். எனவே, பார்ப்பனரல்லாத பெரிய தலைவர்களெல்லாம், பார்ப்பனக் கட்சியென்று சொல்லுகிற இந்த சுயராஜியக் கட்சியில், பிறப்பினால் பார்ப்பனரல்லாதாராகிய நீங்கள் முழுகிப்போய்விட்டது மிகவும் பரிதபிக்கத் தக்கதே. தனிப்பட்ட முறையில், நீங்கள் உங்களுக்கிஷ்டமானபடி கொள்கைகளை மாற்றவோ, சேர்க்கவோ உங்களுக்கு சுதந்தரமிருக்கிறது உண்மை. ஆனால் ஒரு பொது ஸ்தானத்தின் பெயரால் பொது ஜனங்களின் காரியத்தில், பொது ஜனவாக்கைப்பெற நீங்கள் முன் வருவதால் உங்களுடைய அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் ஜனங்களுக்கு விளக்கிக்காட்டக் கூடுமானவரையில் சமாதானஞ் சொல்லி உங்கள் கொள்கைகளுக்கு அவர்களின், ஆதரவைப் பெறவேண்டியது அவசியம்.

திரு. சண்முகஞ் செட்டியாரே!

நீங்கள் இந்தியா சட்ட சபையில் மூன்று வருஷங்களாயிருந்து வருகின்றீர்கள். அடுத்த மூன்று வருஷங்களுக்கும் அச்சக்காரம் போட்டிருக்கிறீர்கள். நீங்கள் அப்பதவிக்கு எல்லாப்படியிலும் பொறுப்பும் யோக்கியதையும் உடையவர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதிலும், சுயராஜியக்கட்சியில் நீங்கள் ஒரு திராவிடராவது இந்தப் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பது சந்தோஷமே. ஆனால் நீங்கள் இந்தப் பதவியைப் பெறுவதற்காக சுயராஜியக்கட்சிக்கு போகவேண்டியதில்லை. நமது கட்சியிலிருந்தே இப்பதவியை அடையமுடியும். அப்படியிருக்க,பார்ப்பனர்க் கட்சியில் கலந்துகொண்டிருக்கும் காரணம் என்ன? நமது கட்சியிலிருந்தால் அகில இந்தியத் தலைவர் பதவி கிடைக்காதென்ற பயமா? அல்லது சிங்கத்தின் குகையிலேயேபோய் அதன்பல்லைப் பிடித்துப் பார்க்கலாம். பார்ப்பனர் நிறைந்த கூட்டத்தின் மத்தியில் பார்ப்பனரல்லாதாருக்காகப் போராடலாம் என்ற தைரியமா? என்ன காரணம் பற்றி நீர் பார்ப்பனக் கட்சியில் கலந்து கொண்டிருக்கிறீர் என்பதை ஜனங்கள் அறிய அவாவுகின்றனர்.

சென்னைச் சட்ட சபை மெம்பர்களாகிய செட்டியாரே! கவுண்டரே! நீங்கள் இருவரும் 6 வருஷமாக இப்பதவியை அனுபவித்துவருகிறீர்கள். திருப்தி அடையாமல் இன்னும் 3 வருஷத்திற்கு அச்சக்காரம் போட்டிருக்கிறீர்கள். சென்ற இரண்டு தேர்தல்களிலும் ஜனங்கள் உங்களைத் தேர்ந்தெடுத்தது, அவர்களுக்குஉங்களிடத்திலிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. இரண்டு தடவை சேர்ந்தாற்போல் உங்களை தங்கள் பிரதிநிதிகளாகக் கோரிக்கொண்டதினால் நீங்கள் அவர்களிடத்தில்எவ்வளவுபொறுப்போடு நடந்து கொண்டிருக்கவேண்டும்? சென்ற 6 வருஷங்களாகச் சட்ட சபையில் இருந்து நீங்கள் சாதித்த காரியங்கள் என்னென்ன? இதைச்சொன்னோம், அதைச் சொன்னோம் என்றுசொல்லாமல் இதைச் செய்துமுடித்தோம் அதை நடத்தி ஜெயம் பெற்றோம் என்று சொல்ல ஏதாவது உண்டா? அதைக் கொண்டுதான் ஜனங்கள் உங்கள் வேலையைக் கணிப்பார்கள்.

அடுத்த தேர்தல் சமீபத்து வருகிறது. உங்களைத்தவிர இந்தஸ்தானங்களுக்கு தகுந்த யோக்கியதை யுள்ளவர்கள் வேறு ஒருவரும் இல்லையென்று சொல்ல முடியாது. ஒன்று இரண்டு முறை இருந்துவிட்டு மூன்றும் முறையும் நீங்களே இருக்கவேண்டிய அவசியமும் ஜனங்களுக்குத் தெரியவில்லை. பொது ஜனவேலையில் பாடுபட உங்களைப்போன்று பொருளும் சாவகாசமும் படைத்த அநேகருக்கு ஆசையிருக்கலாம். ஆகையால் இந்த நிலைமையில் பிராமணருடைய ஆதிக்கத்திற்குட்பட்ட காங்கிரஸ் கட்சியின் பேரால் ஓட்டுப்பெற பார்ப்பது சரியல்ல. பார்ப்பனர் ஆதிக்கத்திலிருக்கும் காங்கிரசுக்குக் கட்டுப்பட்டு, இன்று சட்ட சபைக்கு போவது, நாளை வெளியில் வருவது, மறுநாள் திண்ணையிலிருந்து பார்ப்பது, அடுத்தநாள் உத்தியோகங்கிடைக்குமாவென்றுகுறி பார்ப்பது, ஆகிய திருவிளையாடல்களை ஸ்ரீமான் அய்யங்கார் கோஷ்டியின் உத்திரவுப்படி செய்வதுஎன்று தீர்மானங்கொண்ட நீங்கள் வாக்காளர்களுடைய நன்மையை நாடியுழைப்பதெப்படி? ஆகையால் நமது இராஜீய வாழ்வின் நலத்தைக் கருதி கீழ்கண்ட கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டுகிறேன்.

வினாக்கள்.

(1) "குறை நீங்கும் வரை உதவி மறுப்பது" என்ற சுயராஜ்யக் கட்சியின் கொள்கையையும், கவர்ன்மெண்டோடு சதா முட்டுக்கட்டை போட்டு இரட்டையாட்சியை ஒழிப்பது என்ற நடை முறையையும் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

(2) ஒப்புக்கொண்டால்.

(அ) இரட்டையாட்சியை ஒழித்தபின் செய்வதென்ன? வரிகொடா வியக்கத்திலும், சட்ட மறுப்பிலும் உங்களுக்கு நம்பிக்கை யுண்டா?

(ஆ) ஒப்புக்கொள்ளாவிட்டால் நீங்கள் சுயராஜிய காங்கிரஸ் கட்சிக்காரர் என்பதற்கு என்ன அடையாளம்?

(3) உங்கள் அகில இந்தியத் தலைவர் பண்டித நேரு லாகூரில் பின் வருமாறு சொன்னதாகத் தெரிகிறது. "இந்துக்கள் இந்து இராஜியத்திற்காக முயர்ச்சி செய்யப்பட்டும், மகம்மதியர் மகம்மதிய இராஜியத்திற்காக பாடுபட்டும் இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வளவு வேண்டுமானாலும் சண்டைபோட்டுக் கொள்ளட்டும். ஒன்றுமாத்திரம் அவசியம். அதாவது அந்நிய ஆட்சியை ஒழிக்க முன் வரட்டும்" இப்படிச் சொல்வதிலிருந்து சுயராஜியம் இன்னது என்று நீங்கள் அறிந்தபடி விளக்கிக் காட்டுங்கள்.

(4) வகுப்புவாரி நலங்களைக் கொல்ல வேண்டும் (Communalism must killed)என்று உங்கள் மகாநாடுத் தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் முடிவு சொல்லுகிறாரே, இவ்விஷயமாய் உங்கள் அபிப்பிராயம் என்ன?

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

## தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்.

### தொழிலாளர் மத்தியில் ஓட்டுப்பிரசாரம்.

—:O:—

(சித்திர புத்திரன் எழுதுவது)

சென்னை எம். எஸ். எம். ரயில்வே தொழிலாளர் கூட்டத்தில் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் அருமையான மாயப்பிரசங்கம் ஒன்று செய்தார். அப்பொழுது அவர் சொல்லியுள்ளவைகளில் முக்கியமானது இரண்டு விஷயம். அதாவது "உங்களுக்கு அரசாங்க சட்ட சபைகளில் பிரதிநிதித்துவம் கிடையாது அதுகிடைக்கிறவரையில்எங்களை அங்கீகரிக்க வேண்டும்" என்று பேசியிருக்கிறார். ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் ஒரு பிராமணர், அதோடு அளவுக்கு மிஞ்சிய வருணாசிரம தர்மி. ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தை ஒருவேளை பார்த்துவிட்டால் ஒரு மாதத்திற்கு உண்ணாவிரதமிருப்பேன் என்று சொன்னவர்.

அல்லாமலும் பிராமணன் அயோக்கியனாயிருந்தாலும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் கூலிக்காரனாயிருந்தாலும், குஷ்டரோகியாயிருந்தாலும் அவன் பிறவியிலேயே உயர்ந்தவன். மற்றவன் சூத்திரன்; ஒரு யோக்கியனானாலும் சுயமரியாதை உள்ளவனானாலும் அவன் தாசி மகன்; அடிமை; அவன் பிறவியிலேயே பிராமணனுக்கு வேலை செய்யப் பிறந்தவன் என்று சொல்லும் வருணாசிரம சபைக்குத் தலைவர்.

இவர் 100-க்கு 99 பேர் பிராமணரல்லாதாராயுள்ள, தொழிலாளர்களுக்கு எப்படித் தலைவராவார்; உபதேசம் செய்ய யோக்கியதை உடையவராவார்என்பது நமக்கு விளங்கவில்லை. அல்லாமலும் இவரை எப்படி பேசச்சொல்லி "7,000" தொழிலாளர்களும் உட்கார்ந்து கேட்டார்களோ தெரியவில்லை. ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் செல்வச் செருக்கும் செல்வாக்குப் பெருக்கும் தேசத்தில் எவ்வளவு வேலை செய்கிறது. ஸ்ரீமான் அய்யங்கார் பணமே 7,000 பேரை உட்கார்ந்து கேட்கும்படி செய்கிறது. ஸ்ரீமான் அய்யங்கார் பணமே ஒருவரை உபதேசம் செய்யச் செய்கிறது.

தொழிலாளர்களுக்கு சட்ட சபையில் பிரதிநிதித்துவம் இல்லையென்று மாயக் கண்ணீர் விடும் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் சுயாராஜியக் கட்சியின் சார்பாய் ஏன் ஒரு தொழிலாளியை சட்ட சபைக்கு அனுப்பக்கூடாது? "சுயாராஜியக் கட்சிக்கு தேசத்தில் செல்வாக்கு இருக்கிறது; கட்டுப்பாடு இருக்கிறது; ஒத்துழையாமை நாற்றமடிக்கிறது. அதுவொன்றே தற்கால அரசியல்கட்சிகளில் முதன்மையானது" என்று தொண்டை கிழியக்கத்தி ஓட்டு வாங்கித் தருகிறவரும், இதற்குமுன் பல தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சியாருக்குத் தொழிலாளர்களின் ஓட்டுகளை வாங்கிக் கொடுத்தவருமான ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியார் போன்றவர்களும் இருக்கிறார்கள். இந்தியா சட்டசபைக்குச் சென்னை மாகாணத்தின் சார்பாய் 10 ஸ்தானங்களுக்கு மேலாக இருக்கிறது. அவைகளுக்கு பிராமணரல்லாதார்களில் ஆள்கள் கிடைக்கவில்லையென்று வெறும் அய்யங்கார்களாக நிற்கிறார்களே; ஏன் ஒரு தொழிலாளிக்கு விட்டுக் கொடுத்து ஒரு அய்யங்கார் விலகிக் கொள்ளக் கூடாது? தொழிலாளர்களுக்கு "கடவுள்" போல இருக்கும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரே தான் நிற்கும் ஸ்தானத்தை தொழிலாளர்களுக்குக் கொடுக்கட்டுமே. இல்லாவிட்டாலும் "தொழிலாளர்களே உஷார், உஷார்! ஏமாறாதீர்கள்! ஜஸ்டிஸ் கட்சியாருடன் சேராதீர்கள்! முதலாளிகளுக்குக் காட்டிக் கொடுத்து விடுவார்கள்! பழய சங்கத்தை ஆதரியுங்கள்! வஞ்சகர் வார்த்தையைக் கேளாதீர்கள்!" என்று சதா சர்வகாலமும் அசரீரி பொழிகின்ற 'சுதேசமித்திரன்' பத்திராதிபரும் தொழிலாளர்களுக்கு "கிருஷ்ணபகவான்" போன்றவருமான ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் தஞ்சை திருச்சி ஜில்லாவில் தான் நிற்கப் போவதிலிருந்து விலகிக்கொண்டு ஏன் தொழிலாளருக்காக தனது ஸ்தனத்தை விட்டுக்கொடுக்கக்கூடாது? இவர்களில்ஒருவரும் ஒப்பவில்லையானால் உபதேசியான ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியாரே தான் விலகிக்கொண்டு தனது ஸ்தானத்தை ஏன் தொழிலாளருக்கு விட்டுக் கொக்கக் கூடாது? ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு சொத்திருக்கிறது, மாதம் 10,000 ரூபாய்வரும்படி வருகிறது. எ. ரங்கசாமி அய்யங்காருக்கு மாதம் 1,000 ரூபாய் சம்பளம் வருகிறது; அவர் மகனுக்கு சர்க்கார் உத்தியோகத்தில் மாதம் 500 ரூ. சம்பளம் வருகிறது; அவர் தம்பிக்கு சர்க்கார் உத்தியோகத்தில் மாதம் 1,500 ரூபாய் சம்பளம் வருகிறது. எம். கே. ஆச்சாரியாருக்கு சொத்து இல்லாவிட்டாலும் இந்த மூன்று வருஷம் வாங்கின இந்தியா சட்ட சபைப் பிரயாணப் படிச்செலவு இன்னும் 5, 6-வஷத்திற்குப் போதுமானதாய் இருக்கிறது. இப்படி இருக்க, இவர்களுக்கு ஏன் இத்தனை ஆசை. ஏழைத் தொழிலாளர் தினம் 8 அணு, 10 அணு 1 ரூபாய் சம்பாதிக்கும் கஷ்ட ஜீவனக்காரர்கள்; அதிலும் பிராமணரல்லாதார்கள். ஏன் ஒருவர் இந்தியா சட்ட சபைக்குப்போய் பதவியும் பணமும் தங்கள் கஞ்சிக்கில்லாத பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகமும் சம்பாதித்துக்கொள்ளக் கூடாது? இந்த அய்யங்கார்களுக்கே இந்தியா சட்ட சபை கோயில் மானியமா? இவற்றை மறந்துவிட்டு தொழிலாளர் கூட்டத்தில் "உங்களுக்கு பிரதிநிதித்துவம் சர்க்காரார் வாங்கிக் கொடுக்கவில்லை, ஜஸ்டிஸ்காரர் உதவிசெய்யவில்லை, ஆதலால் எங்களுக்கு ஓட்டுக்கொடுங்கள்," என்றால் என்ன அருத்தம்? இப்பொழுது இருக்கும் தொகுதியில் தொழிலாளர் சட்ட சபைக்குப் போனால் கதவு மூடிக்கொள்ளுமா? சட்ட சபை மண்டபம் இடிந்து இவர்கள் தலையில் விழுந்துவிடுமா? எவ்வளவு நெஞ்சு தைரியமாய்த் தொழிலாளர் மத்தியில் ஓட்டுப்பிரசாரம் செய்ய இந்த அய்யங்கார்களுக்கு தைரியம்வந்துவிட்டது. "தட்டிப் பேச ஆளில்லாவிட்டால், தம்பி சண்டப்பிரசண்டன்" என்பதுபோல் ஏழைத் தொழிலாளர்கள் அப்பாவிகள்; அவர்களுள் கொஞ்சம் வாய் படைத்தவர் புத்தியை அய்யங்கார் பணம் என்னும் கிரகணம் தீண்டிவிட்டது; இவர்கள் அடித்த மூப்புத்தான் என்று நினைத்துக்கொண்டார்கள் போலும். இந்தலக்ஷணத்தில் ஸ்ரீமதி அலமேலுமங்கை தாயாரம்மாள் ஏதோ ஒரு தொழிலாளர் கூட்டத்தில் ராஜ்யவாதிகளைத் "திருட்டுப்பசங்கள்" என்று நினைத்து, ராஜ்ய வாதிகளுடன் சம்மந்தப்படாதீர்கள் என்றுசொன்னதற்கு "சுதேசமித்திர"னுகிய அய்யங்கார் பிள்ளைக்கு மூக்குமேல் கோபம் வந்துவிட்டதே ஒழிய தங்கள் பித்தலாட்டங்களுக்குக் கொஞ்சமும் வெட்கப்படவேயில்லை-இருந்தால் தானே வரும். ஸ்ரீமதி தாயாரம்மாள் மாத்திரம் இப்படிச்சொல்லவில்லை. அநேக பெரியோர்களும் அனுபவ சாலிகளும் உண்மைத் தேச பக்தர்களும் கதறிக்கொண்டுதான் வருகிறார்கள். அய்யங்கார் பணம் இதைக் கவனிக்கச் செய்வதில்லை. நமது தொழிலாளர்களுக்கு இந்த பிராமண அரசியல் வாதிகளின் சூழ்ச்சிகளை அறியயோக்கியதை வரும்வரை நமது தொழிலாளர்களுக்கு விடுதலையில்லை என்று காய்ந்த எண்ணெய்க் குடத்தில்கூட கையை விடுவோம்.

---

## சென்னை ஓட்டர்களுக்கு இனியாவது புத்தி வருமா?

—o—

சென்னைக் கார்ப்பரேஷனில் சுயராஜியக் கட்சியாரின் தலைக்கொழுப்பு ஒரு நிலையில் நிற்காமல் தலை கிருகிருவென்று சுற்றுவதாகவே தெரிகிறது. ஏமாந்துபோன சென்னை ஓட்டர்களுக்கு இனியாவது புத்தி வருமோ வாராதோ நமக்குத் தெரியவில்லை.

அதன் பிரசிடெண்டு ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் கார்ப்பரேஷனை தனது முன்னோர்கள் வீட்டுச்சொத்து போல் நினைத்து தனக்கே உரிமையாக்கிக் கொண்டதாகத் தெரிகிறது. இவர்கள் கையில் ராஜ்ய பாரத்தையும் மந்திரி பதவிகளையும் ஒப்புவித்துவிட்டால் நாடு துலங்கிப்போகும் போலவே இருக்கிறது. அதாவது 3-5-26-ல் ஒரு மீட்டிங்கு போட்டார். அய்யங்கார் சிஷ்யர் ஒருவர் அன்று வர முடியாததால்உடனே மாற்றிவிட்டார். அடிக்கடி இம்மாதிரி மீட்டிங்குபோடுவதும்தங்கள் கட்சி ஆள்களில் ஒரு பூனைக்குட்டிக்கு வர அசவுகரியம் ஏற்பட்டாலும் அதற்காக மீட்டிங்கை தனது இஷ்டப்படி ஒத்திவைத்து விடுவதுமே வேலையாயிருக்கிறார்.

இதுபோல் இதற்கு முன் பலதடவைகளில் நடந்திருக்கிறது. தாங்கள் கட்சியில் ஒரு ஆள் வரமுடியாவிட்டால் தங்கள் கட்சி தோற்றுப்போகக்கூடிய நிலையில் இருக்கிற சுயராஜியக் கட்சிக்கு எவ்வளவு பலமிருக்கிறது என்பது பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. சென்னைக் கார்ப்பரேஷனில் சுயராஜியக்கட்சி கவுன்சிலர்களைப்போல் கார்ப்பரேஷன் கவுன்சிலர் வேலையும் அய்யங்காருக்கு சிஷ்யத்துவமும் மாத்திரமல்லாத வேறு பல வேலை உள்ள கனவான்கள் பலபேர் இருக்கிறார்கள் என்பதை கார்ப்பரேஷன் சுயராஜியக் கட்சி தலைவர் உணராமல் தன் இஷ்டம்போல் மீட்டிங்கு போடுவதும் ஒத்திவைப்பதுமான எதேச்சாதிகாரமான வேலைகளைச்செய்வது தனது அதிகாரத்தை அக்கிரமவழியில் உபயோகப்படுத்துகிறார் என்றுசொல்லாமல் வேறுஎன்னவென்று சொல்வது. ஜஸ்டிஸ் கட்சியாரை

# கல்பாத்தியும் தெருவில் நடக்காமையும்

மலையாளம் ஜில்லாவைச் சேர்ந்த பாலக்காடு முனிசிபல் எல்லைக்குள் கல்பாத்தி என்கிற பாகம் பிராமணர்கள் முக்கியமாய் வசிக்கும் பாகம். அது பல தெருக்களை உடையது. அத் தெருக்கள் எல்லாம் முனிசிபாலிட்டியாரைச் சேர்ந்தது. அதைப் பழுது பார்த்தல், பராமரித்தல் எல்லாம் முனிசிபல் செலவிலேயே நடந்துவருகிறது. அப்படி இருந்தும் அங்கிருக்கும் பிராமணர்கள் அத் தெருவின் வழியாய் பஞ்சமர்கள் என்று சொல்வோர்களையும் தீயர் என்று சொல்வோர்களையும் நடப்பதற்கு விடுவதில்லை. அத்தெருக்களின் முகப்புகளில் உள்ள பல வியாபாரக் கடைகளிலும் பிராமணர்கள் வந்து சாமான்கள் வாங்கினால் அதை தங்கள் வீட்டுக்குத் தூக்கிச் செல்ல மகமதியக் கூலிகளையாவது, கிறிஸ்தவக் கூலிகளையாவது அமர்த்தி எடுத்துக்கொண்டு போவதேதவிற ஷெடி இந்துகூலிகளை எடுக்கவிடுவதில்லை. இதற்காகவே அக்கடைகளுக்குப் பக்கத்தில் மகமதிய கிறிஸ்துவக் கூலிகள் அதிகமாய் நின்று கொண்டிருப்பார்கள்.

அல்லாமலும் அந்த வீதிகளில் உத்தியோகஸ்தர்களும் குடி இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கும் ஆபீசு சம்மந்தமான காகிதம் போக்குவரத்து முதலியவைகளுக்கும் மகமதிய, கிறிஸ்துவ, பிராமண, நாயர் ஆகிய ஜாதியிலேயே குமாஸ்தா பியூன் முதலியவைகளை நியமித்துக்கொள்வதே அல்லாமல் தியர், ஈழவர் என்கிற வகுப்பார்களை நியமிப்பதில்லை. தவிரவும் சென்னையில் இருந்து கள்ளிக்கோட்டைக்குப் போய்க் கொண்டிருக்கும் நேர் ரஸ்தாவில்தான் பாலக்காடு டவுன் பெரிய கடைவீதி இருக்கிறது. அக் கடைவீதிதான் பெரிய மண்டிக்கடை, மளிகைக்கடை, ஜவுளிக்கடை, பாத்திரக்கடை, பலகாரக்கடை, வெத்திலை பாக்குக் கடை, புகையிலை மண்டி, முதலிய வியாபாரங்கள் நடக்கும் வியாபார ஸ்தலமாய் இருக்கிறது. இதுவும் முனிசிபல் பொது ரஸ்தாவாகும். இதிலும் செரமக்கள் முதலிய சில தாழ்ந்த ஜாதியார் என்போர்கள் நடக்கக்கூடாது. இந்தக் கடைவீதிகளிலும் ஷெடி தாழ்ந்த ஜாதியார் கூலிவேலை செய்யவுங் கூடாது. தங்களுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கவும் கூடாது. வேறு யாரிடமாவது, ஒரு மகமதியர் மூலமாகவோ, கிறிஸ்துவர் மூலமாகவோ "உயர்ந்த ஜாதி" இந்து மூலமாகவோதான் காசு கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டும். ஆனால் இந்தக்கடைவீதியில்தான் சர்க்கார் போலீசு ஸ்டேஷன் இருக்கிறது. திருட்டு, கொலை, கொள்ளை, போர்ஜரி, விபசாரம் முதலிய வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகவோ, தண்டித்த கைதியாகவோ இருந்தால் அந்த வீதி வழியாக போலீசு ஸ்டேஷனுக்கு போலீசுக் காரர்கள் கைவிலங்கிட்டோ சங்கிலியில் பிணைத்துக் கட்டியோ கூட்டிக்கொண்டு போவதை அடிக்கடி பார்க்கலாம். யோக்கியமானவன் தான் அவ்வழியில் நடக்கக்கூடாது. இவ் விஷயங்களைப்பற்றி சுமார் 7, 8 வருஷங்களுக்குமுன் ஒருதடவை சில கனவான்கள் யோசித்து கல்பாத்தி வழியாக சில தாழ்ந்த வகுப்பார் என்கிறவர்களை அழைத்துச்செல்ல முயற்சித்தார்கள். அதுசமயம் கல்பாத்தி பிராமணர்கள் 'பொதுக் கடைவீதியில் பிராமணரல்லாதவர்கள்தான் மகமதியர் கிறிஸ்துவர்கள், ஈழவர்கள் உள்பட அநேகம் பேர் இருக்கிறார்கள்; அந்த வழியிலேயே தாழ்ந்த ஜாதியார் நடக்கக்கூடாது என்று அவர்கள் சொல்லும்போது, நாங்கள் மாத்திரம் எப்படி எங்கள் தெருவில் நடக்கவிடுவோம்' என்றார்கள். அதன்பிறகு உடனே சிலர் சில தாழ்ந்த ஜாதிக்காரரை அழைத்துக்கொண்டு கடைவீதியின் வழியாய் நடக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அந்தக் கடைவீதியானது பெயருக்கு மாத்திரம் பல வகுப்புக்காரர்கள் அடங்கிய வியாபாரக் கூட்டக்காரரால் வியாபாரம் செய்யப்பட்ட வீதியாயிருந்ததே ஒழிய ஏறக்குறைய எல்லா முக்கிய வியாபாரிகளும் கல்பாத்தி முதலிய பிராமண அக்கிராரங்களில் உள்ள பிராமணர்களிடத்தில் கடன் வாங்கியவர்களாகவே இருந்ததால் அந்த பிராமணர்களின் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்க சக்தியற்றவர்களாகவே இருந்து அந்தப் பிராமணர்கள் தயவுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டியவர்களானதால் இந்த வியாபாரிகள் கடைவீதியிலும் தாழ்ந்த ஜாதிக்காரர் பிரவேசத்தை தடுத்தார்கள் தடுத்ததோடு பிரவேசித்த தாழ்ந்த வகுப்பார்களை நன்றாய் அடித்தார்கள். அதன்மேல் பிராது ஏற்பட்டு அடித்ததற்காக சில செல்வமும் செல்வாக்கும் உள்ள வியாபாரிகள் அபராத தண்டனையும் அடைந்தார்கள். அதற்குப் பிறகு எவரும் செல்லவும் தடுக்கவும் பிரவேசிக்கவேயில்லை. சென்ற வருஷத்தில் வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு பிறகு மறுபடியும் கல்பாத்தி அக்கிராரத்திற்குள் ஈழவர்கள் பிரவேசிக்க முயன்றார்கள். அதுசமயம் சட்டசபையிலும் எல்லா பொது ரஸ்தாவிலும் எல்லா ஜாதியாரும் போகலாம் என்று ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றினார்கள். அது அமுலுக்கு வரும்போது சட்ட மெம்பர் சர் C. P. ராமசாமி அய்யர் தயவில் "வேலையிருந்தால்தான் போகவேண்டும்" என்கிற வியாக்கியானம் செய்யப்பட்டுப் போய் அந்த தீர்மானத்தைக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. பிறகு சில ஈழவர்கள் ஆரிய சமாஜத்தில் சேர்ந்து மதம்மாறி அவ்வழியே நடந்தார்கள். அவர்கள் மீதும் பிராது கொடுக்கப்பட்டு விடுதலை ஏற்பட்டது. இப்போது மறுபடியும் விடுதலை பெற்ற அதே ஆசாமி, அதாவது ஸ்ரீமான் சங்கரன் என்னும் பத்திரப்பதிவு இலாகா குமாஸ்தா தன் எஜமானன் வீட்டுக்கு சர்க்கார் காரியமாய் போகும்போது சில பிராமணர்கள் அவரை வழிமறித்து உபத்திரவம் செய்து, அவர் நடந்த வீதியை பரிசுத்தம் செய்வதற்கென்று 10 ரூபாயுக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிக்கொண்டு விட்டுவிட்டார்கள். இதைப்பற்றி நியாயஸ்தலத்தில் பிராது நடந்து கடைசியாக இவ்வாரத்தில் தடுத்த பிராமணர்களுக்கு ஆள் ஒன்றுக்கு 30 ரூ. வீதம் அபராதமும் போடப்பட்டது. இத்தோடு இது முடியும் விஷயமாகவும் இல்லை. மறுபடியும் கடைவீதிகளில் தாழ்ந்த ஜாதியார் நடக்கக்கூடாது என்பதை சிலர் வற்புறுத்தி பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனாலும் இதுசமயம் பாலக்காடு பெரியகடைவீதி வியாபாரிகள் தயவத்தில் எமாறக்கூடியவர்கள் அல்ல. தாங்கள் சென்றதடவை தடுத்ததே நியாயமல்ல என்பதை நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள்; ஆதலால் சீக்கிரத்தில் தாழ்ந்த வகுப்பாருக்கும் கடைவீதி பிரவேசமாவது கிடைக்குமென்று நம்புகிறோம்.

அல்லாமலும் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் இராமநாதபுரம், தஞ்சை ஜில்லா சுற்றுப்பிரயாணம் முடிந்தபிறகு இதற்காகவே மறுபடியும் பாலக்காடு போக உத்தேசித்திருக்கிறார்.

நினைத்ததற்கெல்லாம் "அதிகார துஷ்பிரயோகம்" "அதிகார துஷ்பிரயோகம்" என்று ஓயாமல் தம்பட்ட மடிக்கும்வர்கள் இம்மாதிரி கார்ப்பரேஷன் தலைவர் செய்கைக்கு என்ன பெயர் கொடுப்பார்கள். "கண்ணிய மற்ற தும்பி" எனப்பெயர் கொடுப்பார்கள். எந்தப் பெயரைக் கொடுத்தாலும் நமக்குக் கவலையில்லை. இனிமேலாவது சென்னை ஓட்டர்களுக்கு புத்தி வருமா?

---

## பவானி தாலூகா, கிராமப் பிரசாரம்.

பவானி தாலூகா காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான் எம். ஸ்ரீரங்கசாமி செட்டியார் எழுதுகிறார்:—

எனது வேண்டுகோளுக்கிணங்கி கோவை ஸ்ரீமான் அ. அய்யாமுத்துக் கவுண்டர் அவர்கள் சென்ற வாரம் இந்தாலூகாவுக்கு விஜயம் செய்தார்.

விளாங்குட்டையூர், மாவங்குட்டை, பூனாச்சிபுதூர், ஒலகடம், செம்புலிச்சாம்பாளையம், ஆலாம்பாளையம், கொல்லபாளையம் முதலிய கிராமங்களில் பிரசாரம் செய்யப்பட்டது.

நமது நாட்டின் பூர்விக நிலைமையைப்பற்றியும், மஹாத்மா காந்தியினுடைய உபதேசங்களாகிய சத்தியாக்கிரஹம், கதர், மதுவிலக்கு தீண்டாமைவிலக்கு, பஞ்சாயத்து, நாட்டுக் கல்வி, ஆகிய விஷயங்களைப்பற்றியும் ஜனங்களுடைய மனதில் நன்கு பதியுமாறு வெகு உருக்கமாக ஸ்ரீமான் கவுண்டர் அங்கங்கே பிரசங்கம் செய்தார்.

கொல்லபாளையத்தில் ஸ்ரீமான் பி. சாமியண்ண ரெட்டியாரும், மாவங்குட்டையில் ஸ்ரீமான் முத்துசாமி ரெட்டியாரும், விளாங்குட்டையூரில் ஸ்ரீமான் முத்துசாமி ஆசாரியாரும், பூனாச்சிபுதூரில் ஸ்ரீமான் வெங்கிட்டாச்சாரியாரும், ஒலகடம் ஸ்ரீமான்களான பெருமாள் ரெட்டியார், கிருஷ்ணசாமி ரெட்டியார் முதலானவர்களும், செம்புலிச்சாம்பாளையம் ஸ்ரீமான் நாராயண செட்டியாரும் ஆலாம்பாளையம் ஸ்ரீமான் குருசாமி முதலியார் போன்ற பல முக்கியஸ்தர்களும், இவ் விஷயமாக தங்களாலானதைச் செய்வதாக வாக்களித்தனர். மாவங்குட்டை வாத்தியார் ஸ்ரீமான் செம்பண பிள்ளை போதிய சிரத்தை எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. விளாங்குட்டையூர், திருப்பூர் போன்ற இடங்களிலுள்ள சில தேசாபிமானச் சிறுவர்கள் காங்கிரஸ் விஷயமாகப் பாடுபடுவது போற்றத்தக்கது.

# இந்து மகா சபையின் பலனும், கிலாபத்தும்.

டில்லியில் கூடிய கிலாபத் மகா நாட்டில் மௌலானா மலிக் ஒரு தீர்மானத்தின் பேரில் பேசுகையில் "எங்காவது இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டால் தற்காப்பிற்கான வழியை மாத்திரம் இத்தீர்மானம் கூறுவதாயிருக்கிறது. ஆனால் இந்து சகோதரருடன் ஒற்றுமை ஏற்படுத்த முடியும் என்று இன்னமும் நாம் நம்புவதால்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே சபையோர்கள் கூச்சலிட்டு 'இந்துக்களை சகோதரர் என்று சொன்னது தப்பு' என்றும் அதை வாபீசு வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் கோபாவேசத்துடன் கூறினார்களாம். கடைசியாக மௌலானா ஷவுக்கத்அலி பலதடவை கெஞ்சிக்கேட்டுக் கொண்டதன் பேரில் கூச்சல் அடங்கிற்றாம். இதைப்பற்றி கூச்சல் போட்டவர்கள் பேரில் நமக்கு ஒன்றும் அதிருப்தியும் ஆச்சரியமும் இல்லை; ஆனால் இதிலிருந்து மகமதிய சகோதரர்களின் மனோபாவம் எதுவரை பாய்ந்திருக்கிறது என்று இப்போதாவது இந்துக்கள் தெரிந்துகொள்ளலாம். இவ்வித மனோபாவம் ஏற்படக் காரணமென்ன?

நம் தேசத்து வைதீகப் பிராமணர்களின் இந்து மகா சபை செய்த பழிக்கு இந்து சமூகத்தார் அனைவருமே மகமதியரின் இவ்விதத் துவேஷத்திற்கு ஆளாகிறார்கள்.

இது போலவே சுயமரியாதை உள்ள ஒரு இந்து பிராமணரல்லாதவன் மனுதர்ம சாஸ்திரத்தைப் படித்துப் பார்த்தால் பிராமணர்களை சகோதரர்கள் என்று சொல்ல மனம் வருமா? "சூத்திரன்" என்பவன் பிராமணனின் வைப்பாட்டி மகன்; பிராமணனுக்கு வேலைசெய்யவே பிறந்தவன்; அவன் சொத்து வைத்திருக்க உரிமையில்லை; உரிமை மீறி வைத்திருந்தாலும் பிராமணர்கள் பலாத்காரமாய் பிடுங்கிக்கொள்ளலாம்; பிராமணரல்லாத இந்துக்கள் எல்லாம் 'சூத்திரர்'கள்; சூத்திரஸ்திரீகள் பிராமணர்களுக்கு உரியவர்கள்; பிராமண ஸ்திரீகளை 'சூத்திரர்'கள் மனதில் நினைத்தாலே அவனது உயிர்நிலையை அறுத்துவிடவேண்டும்" என இம்மாதிரி இன்னும் பலவாறாக எழுதிவைத்திருப்பது தான் இந்து மதத்திற்கு ஆதாரமாயிருக்கிறது. அதுபோலவே மகமதியர்கள் விஷயத்திலும் "மகமதியர் என்றால் மிலேச்சர்கள், அவர்களைத் தொட்டால் தொட்ட விரலை வெட்டிவிடவேண்டும்" என இம்மாதிரி எழுதிவைத்துக்கொண்டு இருப்பதோடல்லாமல் அவர்களை எதிர்ப்பதற்கும் வருணாசிரமம் நிலைப்பதற்கும் என்றே இந்து மகாசபை என்ற ஒரு சபையையும் வைத்துக்கொண்டு அதில் மகமதியர் மசூதிகளுக்குமுன் (மகமதியர்கள் மனம் புண்படும்படி) இந்துக்கள் மேளம் அடித்துக்கொண்டு போகவேண்டும் என்றும், இதற்கு மகமதியர்கள் ஆக்ஷேபித்தால் கவர்ன்மெண்டார் பிரசிவேசித்து மகமதியர்களை அடக்கி தங்களுக்கு மேளம் அடிக்க வசதிசெய்து கொடுக்கவேண்டும் என்று கவர்ன்மெண்டைக் கெஞ்சுவதாகவும் ஒரு தீர்மானம் செய்துகொண்டு மகமதியர்களை வலிய வம்புக்கிழுத்தால் அவர்கள் எப்படி நம்மை சகோதரர்கள் என்று கூப்பிட சம்மதிப்பார்கள். மேளம் அடிப்பது என்பது இந்துக்களது கொண்டாட்டத்தின் அறிகுறி. மகமதியர்கள் ஆக்ஷேபிப்பது என்பது அவர்கள் மதக் கட்டளையாகிய குரான் என்னும் வேதத்தின் பேரால் என்கிறார்கள். பிராமணனைப் பிறக்காதவன் எல்லாம் பிராமணனின் வைப்பாட்டி மகன் என்று சொல்லுகிற ஒரு சாஸ்திரத்தின் ஆதாரத்தின் கீழ் இந்துவாயிருக்கும் அவமானத்தைவிட மகமதியருடைய மதக் கட்டளைக்காக இந்துக்கள் தங்கள் கொண்டாட்டத்தையோ சந்தோஷத்தையோ கொஞ்சநேரம் நிறுத்திவைப்பது என்பது இந்து சமூகத்திற்கு பெரிய அவமானம் என்பதாக நாம் கருதவில்லை. மகமதியர்களாவது நமது நாட்டை பிராமணர்கள் காட்டிக் கொடுத்ததின் பலனைப் ஜெயித்து, இந்த பிராமணர்களையே மந்திரிகளாக வைத்து அரசாட்சி செய்த காலத்தில், இந்த பிராமணர் உதவியைக் கொண்டே தங்களை உயர்ந்த ஜாதியாராகவும் நம்மைத் தாழ்ந்த ஜாதியாராகவும் கருத ஏற்பட்டு, அதன் பலனைப் அவர்கள் மதக் கட்டளையை நம் மீதும் நிறைவேற்ற சௌகரியம் செய்துகொண்டார்கள். இந்த பிராமணர்களோ நம்மிடம் பிச்சைவாங்கித் தின்றுகொண்டே அவர்கள் உண்மையாய் நம்பாததும், வேண்டுமென்றே நம்மைத் தலைமுறை தலைமுறையாய் தாழ்த்திவைத்து நோகாம —நகத்தில் அமுக்குப்படாமல் பிழைப்பதற்காக வேண்டி வஞ்சக எண்ணத்தோடு நிரந்தர சூழ்ச்சி செய்து நம்மை அவர்கள் கண்ணில் தென்படக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது, கிட்ட வரக்கூடாது, பேசக்கூடாது, தொடக்கூடாது, கோயிலுக்குள் போகக்கூடாது, "வேதத்தை" படிக்கக்கூடாது என்கிற கொடுமைகளை செய்துவைத்திருக்கிறார்கள். இதை மாற்ற நம்மால் முடியுமானால், கண்டிப்பாய் நமது மத சம்பந்தமான ஊர்வலத்தில் மேளம் அடிப்பதை ஒருகாலும் மகமதியர்களால் நிறுத்த முடியவே முடியாது. அல்லாமலும் எப்படியாவது நாமும் அவர்களும் ராஜிக்கு வந்துவிடுவோம். அப்படிக்கில்லாமல் பிராமண இந்து மகாசபை பிராமணரல்லாதார் தலையில் ஒருகாலும், மகமதியர் தலையில் ஒருகாலும் வைத்து இருவரையும் அழுத்தி நசுக்கப் பார்த்தால் இந்த பிராமணர்களை இருவரும் எப்படி உண்மையான சகோதரர்கள் என்று கூப்பிட மனம் வரும்? போலித்தனத்திற்கு 'சகோதரர்கள்' என்று 1000 தடவை வேண்டுமானாலும் ஏமாற்றுவதற்காக சொல்லலாம். ஆனால், அதனால் ஒரு பலனும் உண்டாகாது. இந்த கொடுமைகளின் பலனாய் ஏற்பட்ட துவேஷங்கள் நீங்கி, உண்மையான சகோதரத்துவம் ஏற்படாமல், காங்கிரஸ்-சுயராஜ்யம்-உரிமை-விடுதலை என்று பேசுவதெல்லாம் பிராமணர்கள் உத்தியோகம் பெறத்தான் உதவுமே யல்லாமல் மக்கள் உண்மை சுயராஜ்ஜியம் பெற உதவவே உதவாது.

# ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எல்லா இந்தியப் பிரசாரகராய் விட்டாராம்.


ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக விளம்பர உப கமிட்டி மெம்பராய்ச் சேர்க்கப்பட்டிருப்பதாகக் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான் எ. ரெங்கசாமி ஐயங்கார் அறிவிக்கிறார், என்று "சுதேசமித்திர" னில் குறிப்பிட்டிருக்கிறது. பொதுத்தேர்தலையொட்டி அவர் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்வாராம். சரி, இவரை யார் நியமித்தார்கள்? ஸ்ரீமான் எ. ரெங்கசாமி ஐயங்கார் நியமித்தார்; ஸ்ரீமான் சத்தியமூர்த்தி இந்தியா வெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். யாருடைய பணம்? ஊரார் பொதுப் பணம். என்ன பிரசாரம்? பிராமணத் தேர்தல் பிரசாரம். அதாவது பொது ஜனங்கள் பணத்தில் மாகாணம் மாகாணமாய்ச் சுற்றி "தமிழ்நாட்டில் பிராமணரல்லாதார் என்கிற அப்பிராமணக் கூட்டம் ஒன்று இருக்கிறது; அவர்கள் எல்லோரும் தேசத்துரோகிகள்; அவர்களுக்கு மூளைகிடையாது; பிராமணர்கள் தான் பெரிய தேசபக்தர்கள்; மஹாபுத்திசாலிகள்; அதிலும் நானும் ஸ்ரீமான்கள் எ. ரெங்கசாமி ஐயங்காரும், எஸ். சீனிவாசய்யங்காரும், சி. வி. வெங்கட்டரமணய்யங்காரும், எம். கே. ஆச்சாரியாருந்தான் மகா மகா புத்திசாலிகள், தேசபக்தர்கள்; ஒத்துழையாமையின்போது நாங்கள்தான் முன்னணியிலிருந்து மிகவும் கஷ்டப்பட்டு பெரிய பெரிய தியாகம் செய்தவர்கள்; கதர், மதுவிலக்கு, தீண்டாமை முதலியவைகளில் அதிக நம்பிக்கையுடையவர்கள், காரியத்திலும் நடத்துகிறவர்கள். அதனால்தான் தமிழ்நாட்டு உண்மை தேசபக்தர்களான ஸ்ரீயான் கலியாணசுந்தர முதலியார் போன்றவர்கள் எங்கள் ஐவரையே தமிழ் நாட்டிற்குத் தலைவர்களாகத் தெரிந்தெடுத்து எங்களையே பின்பற்றுகிறார்கள். நாங்கள்தான் தமிழ் நாட்டுக்குத் தலைமை வகிக்க யோக்கியதை உள்ளவர்கள்; எங்களைத் தவிர மற்றவர்களெல்லாம் தேசத் துரோகிகளும் வகுப்பு நலன் நாடுபவர்களுமான குறுகிய புத்தியுடையவர்கள்" என்று பிரசாரம் செய்து எல்லா இந்தியத் தலைவராவார்கள். மற்றபடி வேறு என்ன பிரசாரம் செய்யக்கூடும்?

தமிழ் நாடே! உன் தலைவிதிதான் என்ன? உன்னை இத்"தலைவர்" களுக்குக் காட்டிக்கொடுத்த "தர்ம சீலர்களுக்கு" ஆயுள்தான் எவ்வளவோ?.........

# இரண்டாவது வெலம நாயுடு மகாநாடு.

## திரு. ஜே. எஸ். கண்ணப்பர் தலைமை வகிக்கிறார்.

மதுரை ஜில்லா வெலம நாயுடுகள் 2-வது மகாநாடு 1926-ம் வருஷம் மே மாதம் 16-ந் தேதி திருமங்கலம் தாலூக்கா குண்ணத்தூரில் நடைபெறும். அது காலை "திராவிடன்" ஆசிரியர் திரு. ஜே. எஸ். கண்ணப்பர் தலைமை வகிக்க அன்புடன் இசைந்திருக்கிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஹு வைகாசி-மீ ௩-உ

# தேர்தல் அபேக்ஷகர்கள்.

—[❋]—

சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் சென்னை சட்ட சபைக்கும் இந்தியா சட்ட சபைக்கும் வரப்போகும் தேர்தல்களுக்கு ஐயங்கார் கோஷ்டியாரால் அபேக்ஷகர்களை நியமனம் செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. இதனை எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியாரும் ஒப்புக் கொண்டு உறுதி படுத்தியாய் விட்டதாம். ஆனாலும் இன்னும் பல ஜில்லாக்களுக்கு அபேக்ஷகர்களைப் பூர்த்தி செய்யாமல் காலியாக விட்டு வைத்திருக்கிறார்கள். அது எதற்காக வென்றால் தாங்கள் இதுவரை நியமித்த பட்டியானது பிராமண ரல்லாதார்களையே அதிகமாய் நியமித்ததாகப் பொது ஜனங்களை நம்பும்படி செய்வதற்காகவும், பிராமணர்களை நியமிக்கப் போகும் ஸ்தானங்களை யெல்லாம் காலியாக வைத்துப் பின்னால் சமயம் பார்த்து ஜில்லாவுக்கு ஒவ்வொருவராகச் சேர்த்துக் கொள்ளும் தந்திரத்திற்காகவுமே தான் என்று சொல்லுவோம்.

உதாரணமாக, தஞ்சை ஜில்லாவுக்கு ஒரு ஸ்தானம் காலி. இதற்கு ஒரு ஐயரோ, ஐயங்காரோ திரை மறைவில் இருக்கிறார். அவர் பெயரை இப்போது சொன்னால் கலகம் ஏற்பட்டு விடும். ஆதலால் மூடு மந்திரமாகவே வைத்திருந்து, சமயம் பார்த்து அந்தப் பெயரை வெளிப்படுத்தி விடுவார்கள். ஜனங்கள் ஒரு சமயம் ஒப்ப மாட்டார்கள் என்று தெரிந்தால் பிராமணரல்லாதாரிலே ஒரு ஆகாவளியைப் பெயருக்கு மாத்திரம் போட்டு, ஐயரோ ஐயங்காரோ சுயேச்சையாய் நின்று சுலபத்தில் தட்டிக் கொண்டுபோய் விடும்படி செய்வார்கள். மற்ற ஜில்லாக்கள் விஷயத்திலும் இதே இரகசியக் கருத்துதான். இந்த தந்திரத்திற்குஎப்படியாவது பணச்செலவு செய்தாவது பிராமணரல்லாத "தலைவர்களையும்" பிரசாரகர்களையும் உட்படுத்திக் கொள்ளுவார்கள்.

ஓட்டர்களும் இதை அறியாமல் "ஐயோ, பாவம் ஸ்ரீமான் ஐயங்காரும் முதலியாரும் தன்னாலான வரை பிராமணரல்லாதாரையே நிறுத்தப் பார்த்தார்கள்; ஆட்கள் கிடைக்க வில்லையே, என்ன செய்வது," என்று நம்பி, ஏமாற அனுகூலமாயிருக்கும் என்கிற முன்னெச்சரிக்கை யுடனேயே பல ஸ்தானங்கள் காலியாக விடப் பட்டிருக்கின்றன. ஆனபோதிலும் இப்பொழுது உறுதி படுத்தப்பட்ட அபேக்ஷகர்களை வைத்துக் கொண்டு நமது பிராமணர்கள் செய்யப் போகும் வேலை என்னவென்று பார்ப்போமானால் மகாத்மா பெயராலும், காங்கிரஸ் பெயராலும், சுயராஜ்யக் கட்சி பெயராலும், ஜெயிலுக்குப் போய் கஷ்டப்பட்ட தேசபக்தர்கள் பெயராலும் ஜஸ்டிஸ் கட்சியை திட்டுவதுபோல் பிராமண ரல்லாதார்களைத் திட்டிக்கொண்டு தங்களுக்கும் தங்கள் சொற்படி ஆடத் தயாராயிருக்கும் ஆள்களுக்கும் ஓட்டுப் பிரசாரம் செய்வதைத் தவிர வேறு வேலை யில்லை. இதற்காகப் பிராமணப் பத்திரிகைகளும் பிராமணப் பிரசாரகர்களும் ஏற்கனவே தங்கள் கைவசமிருந்த போதிலும் தற்காலம் உள்ள நிலைமையில் பிராமணரல்லாத பிரசாரகர்களும் பிராமணரல்லாத பத்திரிகைகளும் இல்லாமல் பிராமணரல்லாதார்களை ஏமாற்ற முடியாமலிருப்பதால் அதற்காக தேர்தல் முடியும்வரை சில்லரைப் பணம் கொடுத்து சுவாதீனம் செய்துகொள்ள வேண்டியதிருக்கிறது. அப்படி சுவாதீனப் படுத்திக் கொண்டாலும் சிற்சில பிராமணரல்லாதார் மூலமாகவும் அவர்களது பத்திரிகை மூலமாகவும் இவர்கள் புரட்டும் பித்தலாட்டங்களும் வெளியாகி விடுகிறபடியால் அவர்களை அடக்கவும் அவர்கள் பெயரில் ஏதாவது பழி சுமத்தி அவர்கள் வார்த்தையை பிறர் நம்பாமலிருக்கும்படி செய்யவேண்டிய அவசியமும் இப்போது பிராமணர்களுக்கு ஏற்பட்டுப் போயிருக்கிறது. இதற்காக வேண்டி கோவை கனவான் ஒருவர் சில யுக்திகள் கண்டு பிடித்து, அதாவது முதலாவதாக இப்போது ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரைப் பற்றி பலவாறான தூஷணைகளைக்கொண்ட துண்டுப் பிரசுரங்களையும் தூஷணையான பத்திரிகைப் பிரசாரங்களையும் மற்றும் பல காரியங்களையும் ஆரம்பித் திருக்கிறார். அதென்னவென்றால்,

1. ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஈரோடு முனிசிபல் சேர்மனாயிருந்த காலத்தில் சில தவறுதல் செய்திருக்கிறார்,

2. தங்களது குடும்ப சத்திர தர்மத்தை நடத்துகிற விஷயத்தில் தனது கொள்கைக்கு விரோதமாய் நடந்துவருகிறார்,

3. ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்துவிட்டார்,

4. ஜஸ்டிஸ் கட்சியாரிடம் திரவியம், வாகனம் முதலிய சகாயம் பெற்றுப் பிரசாரம் செய்கிறார்,

5. சர்க்காருக்கு அடிமையாகிவிட்டார்,

ஆகிய இவைகளைப் பத்திரிகைகள் மூலமாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும், கூலிப் பிரசாரகர்கள் மூலம் திண்ணைப் பிரசாரமாகவும் ஓட்டர்களுக்கு வினியோகம் செய்து வருகிறார். இனியும், வேறு சில சதியாலோசனைகளும் நடந்துவருகின்றன. இவற்றைப்பற்றி மறுப்புரை எழுதும்படி பல நண்பர்கள் அவசரமும் ஆத்திரமும் கொண்டு நமக்குப் பலவிதமான கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இவ்வாரத்தில் நமக்கு வெளியில் போக வேண்டிய வேலைகள் இருப்பதாலும் இன்னும் என்னென்ன விதமான விஷம விஷயங்கள் கிளம்பப் போகிறது என்று பார்த்து முடிவாக சமாதானம் எழுதலாம் என்கிற காரணத்தாலும் இவ்வாரம் அவைகளைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை. அடுத்த வாரமோ அல்லது அதற்கடுத்தவாரமோ ஸ்ரீமான் நாயக்கரைப் பற்றி பத்திரிகையில் கண்ட விஷயங்களையும் துண்டுப் பிரசுரங்களில் கண்ட விஷயங்களையும் வாய்ப் பிரசாரத்தில் சொன்னதாகத் தெரிய வந்த விஷயங்களையும் சுருக்கமாக நமது பத்திரிகையில் எழுதித் தக்க சமாதானம் கூறுவோமாதலால், சில நண்பர்களை தயவுசெய்து அவசரப்பட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம்.

# ஆசை வெட்கமறியாது.

சுயராஜ்ஜியக் கட்சியாரின் வெளியேற்றம்.

"சுவற்றுக் கீரையை வழித்துப்போடடி சுரணைகெட்ட வெள்ளாட்டி", என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது ஒரு ஸ்திரீ கீரை கடைந்து, தன் கணவனுக்குச் சாதம் போட்டு கீரை பரிமாறினாள். கணவன் மனதில் எதையோ வைத்துக்கொண்டு கோபம் வந்துவிட்டதுபோல பாசாங்கு செய்து கீரை பக்குவம் நன்றாக இல்லையில்லை என்று கீரையை வாரி சுவற்றின்மீது இரைத்துவிட்டு எழுந்துபோய் படுத்துக்கொண்டான். ஸ்திரீயும் அந்த இலையை இழுத்துவைத்து விட்டு மீதி இருந்ததைப் போட்டு சாப்பிட்டு விட்டுப் படுத்துக்கொண்டாள். சிறிது நேரத்திற்குப் பிறகு கணவனுக்குப் பசி ஏற்பட்டது. மறுபடியும் வந்து உட்கார்ந்து கொண்டு சாப்பாடு போடச் சொன்னான். அந்த மனைவி முன் இழுத்துவைத்திருந்த இலையையே பக்கத்தில் இழுத்துவிட்டுவிட்டு நின்றுகொண்டாள். இலையில் வெறும் சாதம் மாத்திரந்தான் இருந்தது. கணவன் மனைவியைப்பார்த்து 'இந்த சாதத்திற்கு ஏதாவது கறி வைத்துத்தொலை, தொட்டு சாப்பிட' என்று சொன்னான். அதற்கு மனைவி கறி யில்லை என்று சொன்னாள். பழைய கீரையையாவது வை என்றான். அதற்கவள் 'தாங்கள் கீரை நன்றாகயில்லையென்று வேண்டாமெனச் சொன்னதால் நான் எல்லாம் சாப்பிட்டுவிட்டேன்' என்று சொன்னாள். கணவன் மிகுந்த கோபத்துடன் 'அதோ தெரிகிறதே அந்த சுவற்றுக் கீரையை வழித்துப்போடு சுரணைகெட்ட வெள்ளாட்டி' என்று சொன்னான். மனைவி, 'நான் நீங்களா சுரணைகெட்டவர்' என்று சொல்லி சுவற்றிலிருந்ததை சுரண்டிப் போட்டாள். கணவன் பேசாமல் சாப்பிட்டுவிட்டுப் போனான், என்பதாக ஒரு கதை உண்டு. அதைப்போல் இருக்கிறார்கள், சர்க்காரோடு கோபித்துக்கொண்டு சட்டசபையை விட்டு வெளிவந்த சிப்பாய்கள்.

நாளது மாதம் 17-ந் தேதி கல்கத்தா சட்டசபைக் கூட்டம் ஒன்று நடக்கிறதாம்; அதற்கு "வெளியேறிய" சுயராஜ்யக் கட்சியார் மறுபடியும் போகப்போகிறார்களாம். இதற்குக் காரணம் என்னவென

ருல் சட்டசபையில் அவசரச் சட்டமொன்று வரப்போகிறதாம். அதை இவர்கள் போய் எதிர்க்கப் போகிறார்களாம். சர்க்காரார் அவசரச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நினைத்தால் இவர்கள் தடுப்பினால் நின்றுவிடுமா? நின்றுவிடுமென்று நினைப்பார்களேயாகில் சட்ட சபையிடம் இவர்களுக்கு நம்பிக்கையிருப்பதாக அருத்தமாகவில்லையா? அப்படிப்பட்டவர்கள் ஏன் வெளியில் வந்ததாகச் சொல்லிக்கொள்ள வேண்டும்? இதற்காக தலைவர் பண்டித நேருவின் 'வீரமொழி' பேசவேண்டும். ஒரு தடவை சட்டசபைப் பிரயாணச் செலவைத் தியாகம் செய்ய சக்தியில்லாத சுயராஜ்யக் கட்சி 'வெளியேறிவிட்டோம்' என்று சொல்வது நகைப்பிற் கிடமாயிருப்பதை சிறிதும் அறியவில்லை. "ஆசை வெட்கமறியாது" என்பதற்கு நமது சுயராஜ்யக் கட்சியே சரியான உதாரணம். ஆனாலும் இவைகளெல்லாம் நமது ஓட்டர்கள் புத்திக்கு சுலபத்தில் படப்போவதில்லை. என்ன செய்யலாம்? நல்ல காலம் வரும்போது தானாகவே புத்திவரும்.

---

## மகாத்மா காந்தியின் ஓய்வும் பாமர ஜனங்களும்.

(சித்தலை எழுதுவது)

ஜெயிலில் இருந்து 1924-ம் வருடம் நமது மகாத்மா விடுதலையடைந்த பொழுது உடல் நலிவுற்றிருந்த காலத்தில் தேச மகாஜனங்கள் அவரை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். மகாத்மா அதற்கு உத்தரமளிக்கும்போது, "நீங்கள் சமூகச் சண்டை போடுகிற காலத்தில் நான் எப்படி ஓய்வு எடுத்துக்கொள்ளுவேன். பிராமணர் பிராமணரல்லாதார், முகமதியர், சீக்கியர், பார்சியர், கிறிஸ்துவர் ஆகிய இவர்களுடைய ஒற்றுமை யில்லாமல் சுயராஜ்ஜியத்தைப் பற்றிப் பேசுவது வீண்வார்த்தை என்பது எனது உறுதியான அபிப்பிராயம். ஆதலால் உண்மையில் சுதந்திரம் பெறவேண்டுமானால் எவராலும் பிரிக்க முடியாத, சமூக ஒற்றுமை ஏற்பட வேண்டும். ஆகலான் சமூக ஒற்றுமை ஏற்படும்வரை நான் ஓய்வெடுத்துக் கொள்ள முடியாது," என்று மௌலானா மகமதலிக்கு 7—2—24-ல் (பகிரங்கமாக) கடிதம் எழுதின மகாத்மா இப்போது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். இதன் தத்துவம் என்ன? பிராமணர்—பிராமணரல்லாதார், இந்து—முஸ்லீம் முதலியவர்கள் ஒற்றுமையாகிவிட்டார்களா? அல்லது சுயராஜ்யம் வந்து விட்டதா? அல்லது அப்போது வேறு மகாத்மா இப்போது வேறு மகாத்மாவா? வாசகர்களே இதை நன்றாய் யோசித்துப் பாருங்கள். பிராமணர்-பிராமணரல்லாதார், இந்து-முஸ்லீம் சமூகங்கள் ஒற்றுமையாகவுமில்லை; மகாத்மாவும் மாறவில்லை? ஆனால் ஏன் ஓய்வெடுத்துக்கொண்டார்? அவருக்கு இனி ஒற்றுமை ஏற்படும் என்கிற நம்பிக்கை இல்லை.

"இந்த நிலையில் சுயராஜ்யம் என்பது பித்தலாட்டம்; அது கிடைக்கிற காரியமல்ல. நாம் எவ்வளவு பாடுபட்டாலும் படித்த கூட்டத்தார் அதை உபயோகப்படுத்திக் கொண்டு காரியத்தைக் கெடுத்து விடுகிறார்

(இதன் தொடர்பை 3-ம் பத்தியில் காண்க.)

## சர் தியாகராயர் வருடாந்தரத் திருவிழா.

### மே மாதம் 17-ஆந் தேதி கொண்டாடப்படும்.

காலஞ்சென்ற சர் பி. தியாகராயரின் முதலாவது வருடாந்தரக் கொண்டாட்டம், 1926-ம் வருடம் மே மாதம் 17-ம் தேதி திங்கட்கிழமையன்று சென்னையில் பார்ப்பனரல்லாதார்கட்சியாரால் கொண்டாடப்படும்.

### நிகழ்ச்சிக் குறிப்பு.

—o—

1. மத்தியானம் 12-மணிக்கு நகரத்திலுள்ள முக்கிய கோவில்களிலெல்லாம் அபிஷேகமும் அர்ச்சனைகளும் செய்யப்படும்.

2. எல்லா அன்னதான சமாஜங்களிலும் ஏழைகளுக்கு சோறுபோடப்படும்.

3. அலங்கரிக்கப்பட்ட சர் பி. தியாகராய செட்டியாரது உருவப்படம் ஒன்று மன்ரோ உருவச்சிலையிலிருந்து காஸ்மபாலிட்டன் கிளப்புக்கு அடுத்தாப் போலுள்ளதும், மவுண்ட்ரோடு 14-வது இலக்கமுள்ள கட்டடமுமாகிய சர் பி. தியாகராய செட்டி மிமோரியல் பில்டிங்குக்கு (ஞாபகார்த்தக் கட்டடம்) ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். இந்த ஊர்வலம் மாலை 5-30 மணிக்குப் புறப்படும்.

4. மாலை 6-30 மணிக்கு சர். பிட்டி தியாகராய செட்டியார் மிமோரியல், பில்டிங்ஸ் திறப்பு வைபவம், கனம் பனகால் அரசரால் நடைபெறும்.

இந்த ஊர்வலத்தில் எல்லோரும் கலந்து கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பி. டி. குமாரசாமி செட்டி,
தென் இந்திய நலவுரிமைக்கூட்டுறவுச் சங்க அமைச்சர்.

---

## சென்னை சட்டசபைத் தேர்தல்.

ஈரோடு

ஜனாப் கா. அ. ஷேக்தாவூத் சாஹிபு அவர்கள் தெரிவிப்பதாவது:—

வரப்போகும் சென்னை சட்டசபைத் தேர்தலில் கோயமுத்தூர், நீலகிரி, சேலம், தென்ஆற்காடு ஜில்லாக்களின் முகமதியர்களது தொகுதிக்கு நான் ஒரு அபேக்ஷகனாக நிற்கிறேன்.

---

கள். ஆதலால் சுயராஜ்யம், சுதந்திரம் என்று சொல்லிக்கொண்டு ஏழைகளைப் படித்தவர்களால் ஏமாற்றச் செய்ய விடுவதைவிட, ஏழைகளுக்கு நேரே கஞ்சிவார்க்கும்படி செய்வதே மேலென்று, சுயராஜ்யப் பிரயத்தனத்தில் இருந்து விலகி, ஓய்வெடுத்துக் கொண்டு ஏழைகளைக் காப்பாற்றும் கதர்த் தொண்டு செய்து வருகிறார். ஆனால் மகாத்மா சுயராஜ்ஜியம் என்று சொன்னபோதும், சுதந்திரம் என்று சொன்னபோதும், ஒத்துழையாமை என்று சொன்னபோதும், அதற்காக ஆயிரக் கணக்கான பேர் ஜயிலுக்குப் போனபோதும், முதுகு காட்டி ஓடிக்கொண்டும் திரை மறைவிலிருந்து பேடியுத்தம் செய்து, மகாத்மாவை திட்டிக் கொண்டும் மாதம் ஆயிரம் பதினாயிரம் ரூபாய்களைக் கொள்ளை அடித்துக் கொண்டும் இருந்த (தேசத் துரோகிகள்) சில படித்தவர்கள் என்கிற ஒரு மானமற்ற கூட்டத்தார், அன்னக்காவடியும் கஞ்சித் தொட்டியுமான பல சிஷ்ய கணங்களுடன் இப்போது உத்தியோக வேட்டை ஆடுகின்றார்கள். இதை நமது பாமர ஜனங்கள் அறியாமல் விளக்கில் பூச்சி விழுவதுபோல் அவர்கள் வலையில் விழுந்துமாய்கிறார்கள். இதை வெளிப்படுத்த பத்திரிகையில்லை; கேட்க பிரசாரகர்கள் இல்லை. நாடெல்லாம் 'கங்காதரா, மாண்டாயோ' 'கங்காதரா, மாண்டாயோ' என்பதுபோல் சுயராஜ்யம், உரிமை ஒத்துழையாமை என்கிற ஒரே கூச்சலாயிருக்கிறது. சுயராஜ்ஜியம் என்ன? உரிமை என்ன? ஒத்துழையாமை என்ன? என்று கேட்பதற்கும் ஆளில்லை, சொல்வதற்கும் ஆளில்லை.

சுயராஜ்ஜியம் என்றால் பிராமணர்களுக்கு ஓட்டுக் கொடுக்க வேண்டியது; உரிமை என்றால் பிராமணர்கள் மந்திரிகளாகி மாதம் ரூ. 5,333—5—4 சம்பளம் வாங்கவேண்டியது; எல்லா உத்தியோகமும் பிராமணர்களுக்கே உரிமையாகவேண்டியது; ஒத்துழையாமை என்றால் பிராமணரல்லாதாரை நசுக்கவேண்டியது. இந்த தத்துவங்கள்தான் இப்போது நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் தேசசேவையாய் விளங்குகிறது. அய்யோ! பாமர ஜனங்களே! அறிவில்லாத ஓட்டர்களே! நீங்கள் என்றைக்கு உருப்படியாகப் போகிறீர்கள்!! இப்படி இருக்கும்வரை உங்களுக்கும் சுயராஜ்ஜியம் வருமா?

## வைதிக சந்தேகம்.

(விகட ஞானி எழுதுகிறார்.)

வைதிகத்தில் பெருத்தவர்களாக சொல்லிக்கொள்ளும் கூட்டத்தாரில் ஒரு சிலர், இரயில் பிரயாணம் செய்யும்போது, இரயில் இஞ்சினிலிருந்து சுடு தண்ணியோ-பச்சத் தண்ணியோ கேட்டு வாங்கி வந்து குடிக்கிறார்களே! இது வைதீக ஒழுக்கத்துக்கு விரோதமல்லவா? என்று (சீமை பிஸ்கோத்து ரிஷி) கேட்க, தண்ணீர் இரயிலில் இருக்கும் வலையில்தான் தீட்டு, அதே தண்ணீர் கூஜா செம்பில் வந்துவிட்டால் அப்போது கங்கா ஜலமாக மாறி உயர்ந்துவிடுகிறதென்று (ரவா ரொட்டி முனிவர்) வேண்டிய மேற்கோள்களும் சாத்திரங்களிலிருந்து சூத்திரங்களும் எடுத்துக் காட்டி பதில் சொன்னாராம்.

## ஏழாயிரம்பண்ணை
# பால்ய நாடார் சங்கம்,
### இரண்டாவது ஆண்டு நிறைவு விழா.
### அழைப்புப் பத்திரிகை.

ஐயா, எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலும், பெரியோர்கள் ஆசீர்வாதத்தாலும், எங்கள் சங்கத்தின் இரண்டாவது வருஷக் கொண்டாட்டம், நாளது அக்ஷய-௵ வைகாசி-௴ 3, 4 தேதிகளில் (1926-௵ மே-௴ 16, 17-௳) ஸ்ரீ அம்பிகை மாரியம்மன் கோவிலின்முன் அமைந்திருக்கும் கொட்டகையின்கண், கூடும்படியாய் தீர்மானித்திருக்கிறது. ஈரோடு "குடிஅரசு" ஆசிரியர் தேசபக்தர் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் அக்கிராசனம் வகிக்க மனமுவந்து சம்மதித்திருக்கிறார்கள். அச்சமயம் அறிஞர் பலரால் ஜனசமூக க்ஷேமத்தின்பொருட்டு விஷய அட்டவணையில் கண்டபடி உபந்நியாசங்கள் நடைபெறும். ஆகையால் தாங்கள் தவறாது விஜயம் செய்யும்படி விரும்பி அழைக்கிறோம்.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள,

செ. க. சொ. அருணகிரி நாடார், பிரசிடெண்டு
சி. சொ. அண்ணாமலை நாடார், } காரியதரிசிகள்
க. அ. கணபதி நாடார், }
வே.தொ.சி.பழனிக்குமாருநாடார், பொக்கிஷதார்.

### விஷய அட்டவணை.

அட்சய-௵ வைகாசி-௴, 3-௳ மாலை 4-மணிக்கு ஆரம்பம்.

#### முதல் நாள் நடவடிக்கை.

கடவுள் வணக்கம்:— ஸ்ரீமான் செ. க. சொ. அருணகிரிநாடார் அவர்கள், ஏழாயிரம்பண்ணை.
அக்கிராசனாதிபதியவர்கள் முகவுரை:
மது கடமை:—ஸ்ரீமான் ச. ரா. ரா. காளியப்ப நாடார் அவர்கள், ஏழாயிரம்பண்ணை.
மனிதசமூகமும் சமயநெறியும்:—ஸ்ரீமான் வ. பெ. சீனிவாச நாயுடு அவர்கள் கொம்பங்கிபுரம்.
அக்கிராசனாதிபதியவர்கள் முடிவுரை.
வந்தனோபசாரம்.

அட்சய-௵ வைகாசி-௴ 4-௳.

#### இரண்டாம் நாள் நடவடிக்கை.

ஸ்ரீமான் செ. க. சொ. அருணகிரி நாடார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் காலை 10-மணிக்கு ஆரம்பம்.
கடவுள் வணக்கம்:—ஸ்ரீமான் சி. பாலையா நாடார் அவர்கள் ஏழாயிரம்பண்ணை.
சங்கம் ரிப்போர்ட் வாசித்தல்:—ஸ்ரீமான்கள் காரியதரிசிகள்.
சங்கம்கணக்குகள் சரிபார்த்து ஆடிட்டர் ரிப்போர்ட் வாசித்தல்:—ஸ்ரீமான் ச. அ. க. மண்டலச்சாமி நாடார் அவர்கள், ஏழாயிரம்பண்ணை.
சங்கம் உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுத்தல்.
வந்தனோபசாரம்.

திருமிகு. இராமசாமி நாயக்கர் விருதுநகரில் 15—5—26 சனிக்கிழமை மாலையில் ராவ்பகதூர் இரத்தினசாமி நாடார் ஞாபகக் குறிப்பு வாசகசாலையின் சார்பாய் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவார்.

---

### வணிக வைசியர் மகாநாடு.

தென்னிந்திய "வணிக வைசியர் மகாநாடு" இம்மாதம் (மே) 24, 25. தேதிகளில், மதுராபுரியில் திரு. R. K. ஷண்முகம் செட்டியார் B. A., B. L., M. L. A., அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறும் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

### சென்னை சித்தவைத்திய சங்கம் யோகாநந்தாச்சிரமம்.

இதன் ஆதரவில் நடைபெறுகின்ற தரும வைத்திய சாலைகளில் 1926-௵ ஏப்ரல் மாதம் 1-தேதிமுதல் 30-தேதிவரையில் மருந்துண்டவர்களின் கணக்கு.

1-வது இராயபுரம்.

| | |
|---|---|
| ஆண் | 316 |
| பெண் | 363 |
| குழந்தைகள் | 150 |
| ஆக மொத்தம் | 829 |

2-வது உப்பரவர்பாளையம்.

| | |
|---|---|
| ஆண் | 287 |
| பெண் | 229 |
| குழந்தை | 97 |
| ஆக மொத்தம் | 613 |

என்று அமைச்சர் தெரிவிக்கிறார்.

### சென்னை சட்டசபைத் தேர்தல்.

வரப்போகிற சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு சேலம், கோயமுத்தூர், வடஆற்காடு, தென்ஆற்காடு ஜில்லாக்களின் நிலச்சுவான்தார்களின் தொகுதிக்கு இளம்பள்ளி ஜமீன்தார் ஸ்ரீமான் சி. ராஜலிங்கம் செட்டியார் அவர்கள் ஒரு அபேக்ஷகராய் நிற்கிறார் என்று மானேஜர் ஸ்ரீமான் சி. பி. துரைசாமி அவர்கள் நமக்கு தெரிவிக்கிறார்.

### ஈரோடு முனிசிபல் சென்ட்ரல் பெண் பாடசாலை பரிசளிப்பு விழா.

இப்பரிசளிப்பு விழா ஈரோடு டிஸ்டிரிக்ட் முனிசிப் திரு. கிருஷ்ணசுவாமி அவர்கள் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள். திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் 'ஸ்திரீகளின் சுதந்தரம்' என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவொன்று நிகழ்த்தினார். திரு. ச. முத்துக்கருப்பச் செட்டியாரால் சில பெண்களுக்குக் கைராட்டினங்களும் பரிசாகக் கொடுக்கப்பெற்றது.

### ஈரோடு வளையல்காரத் தெரு பெண் பாடசாலை பரிசளிப்பு விழா.

பென்ஷன் தாசில்தார் திரு. E. N. வெங்கிட்டப்பெருமாள் நாயுடு அக்கிராசனத்தின் கீழ் ஈரோடு மகாஜன கிளைப் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் "பெண்கள் முன்னேற்றம்" என்பது பற்றி சுருக்கமாகப் பேசினார். திரு. முத்துக்கருப்பச் செட்டியார் பள்ளிக்கூட முன்னேற்ற விஷயமாய்ப் பேசினார். முனிசிபல் பள்ளிக்கூட சூப்பரவைசர் திரு. கணபதி சுப்பிரமணிய ஐயர் தலைமை உபாத்தினியை விட்டுவிட்டு ஓர் உதவி உபாத்தினியை வருணித்துப் பிரமாதமாய்ப் பேசியது சிலருக்குப் பிடிக்காமல் அருவருப்பாயிருந்தது. ஈரோடு முனிசிபல் பெண் பாடசாலைக்கு ஒரு பெண் சூப்ரவைசர் நியமிக்கப்பட்டால் நலமாயிருக்கும் என்கிற யோசனையும் புலனாயிற்றென்று தெரியவருகிறது. ஓர் நிருபர்.

### வாகீச சைவசித்தாந்த சன்மார்க்க சபை.

ஈரோட்டிற்கடுத்த கணபதிபாளையத்தில் இச்சித்திரை மாதம் 24, 25-உ வியாழன் வெள்ளி இரண்டு தினங்களில் ஸ்ரீமத் வாலையானந்த சுவாமிகள் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் பழையகோட்டை பட்டக்காரர் கிருமாண்டம்பாளையம் ச. ராஜாக் கவுண்டர் முதலியோரும் கமிட்டி மெம்பர் பூந்துறை துரைசாமி கவுண்டர் கோயமுத்தூர் வெங்கட்டராமணய்யங்காரும் உள்பட சுமார் 200, 300 பேர்கள்வரை விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீமான்கள் கருவுலைசுவாமி, தேவசிகாமணி கவுண்டர், சிவபாத இருதயம் பிள்ளை, வாத நந்தப்ப பிள்ளை, சுப்பண கவுண்டர், சின்னய கவுண்டர், சரவண முதலியார், அ. கந்தசாமி பிள்ளை முதலிய பல கற்றோர்களால் அரிய உபன்யாசங்கள் நடைபெற்றன. இந்த சபையானது இக்கப் பக்கத்திற்கே சிறப்புப் பெற்றதாகவும் சமயத் தொண்டு செய்வதாகவும் விளங்கிவருகிறது. இவ்விஷயத்தில் ஸ்ரீமான்கள் சுப்பண கவுண்டர், நல்லசாமி பிள்ளை முதலியவர்களின் முயற்சி மிகுதியும் போற்றத்தக்கது.

### திருச்சி ஜில்லா பார்க்கவகுல மகாநாடு.

கற்கண்டார் கோட்டை திரு. வையாபுரி உடையார் இல்லத்தில், 17-5-26-௳ முற்பகலில் அவரது பௌத்திரனும் திரு. சுந்தர உடையார் குமாருமாகிய திரு. ஈ. பாலசுப்பிரமணிய உடையாருக்கும், திரு. கா. மாணிக்க உடையார் பௌத்திரியும் "தெய்வீகன்" ஆசிரியர் மே. வே. துரைசாமி உடையார் தங்கையும் ஆகிய திரு. இலக்ஷ்மி அம்மாளுக்கும் நடக்கும் திருமணவிழா வினின்று பிற்பகலில் திருச்சி ஜில்லா பார்க்கவகுல மகாநாடு நடைபெறும். திருக்கோவலூர் ஸ்ரீமத் ஞானியார் மாணவர் திரு. ம. ரா. குமாரசாமி உடையாரும், தமிழ்பண்டிதர் திரு. சாமிசிதம்பர உடையாரும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

### சென்னை மாகாண 10வது ஆதிதிராவிடர் மகாநாடு.

சென்னைமாகாண 10-வது ஆதி திராவிடர் மகாநாடு சென்னை அரண்மனைக்காரர் வீதியிலுள்ள கோக்கேல் ஹாலில் 1926 ௵ மே ௴ 16 ௳ ஞாயிற்றுக் கிழமை காலை 8-மணிக்குக் கூடப் பெறும்.

திரு. பி. வி. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார்
திரு. பண்டித பி. எம். பழனிச்சாமிப் பிள்ளை அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராயிருப்பார்.
திரு. ஆர். வீரய்யன் அவர்கள் எம். எல். சி. மகாநாட்டின் தலைவராயிருக்க அன்புடனிசைந்துள்ளார்.

அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகிறார்கள்.

எம். சி. ராஜா, ஜெ. சிவசண்முகம், பி. பரசுபாணி, டி. சின்னையா.

## பாராட்டுக் கடிதங்கள்.

—(※)—

"குடி அரசின்" முதல் ஆண்டு நிறைந்து இரண்டாமாண்டு ஆரம்பித்ததற்கு பலர் பல பாராட்டுதல் கடிதமும் மகிழ்ச்சிக் கடிதமும் ஆசீர்வாதக் கடிதமும் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நமது பத்திரிகையில் போட இடமும் இல்லை; இடம் செய்து கொள்வதானாலும் அவற்றை நாம் தற்புகழ்ச்சிக்கு உபயோகித்துக் கொண்டதாகவே பிறர் நினைப்பார்கள். ஏனெனில் அம்மாதிரி பிரசுரிக்கப்பட்டு வரும் பத்திரிகைகளைப் பார்த்த காலும் நமது நண்பர்களும் அவ்விதப் பத்திரிகையின் யோக்கியதையைப்பற்றி பேசிக்கொண்டது நமது நினைவிலிருக்கிறது. ஆதலால் செடி கடிதங்கள் எழுதியிருக்கும் நண்பர்கள் அவற்றைப் பிரசுரிக்காததற்கு மன்னிக்க வேண்டுகிறோம்.

தனித்தனியாகவும் சிலருக்கு மன்னிக்கும்படி நாம் எழுதியிருக்கிறோம். ஆனாலும் சிலதை பிரசுரிக்க நாம் கட்டாயப்படுத்தப் படுகிறோம். அவற்றுள் இதனடியில் ஒரு கடிதம் பிரசுரித்திருக்கிறோம். எழுதியவர் ஒரு நாடார் நண்பர். நமது பத்திரிகையிடம் அன்புகொண்டவர். சுமார் 40, 50 சந்தாதாரர்வரை சேர்த்துக்கொடுத்தவர். இக்கடிதத்தை பிரசுரிக்கும்படி மிகுதியும் வேண்டிக்கொண்டு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார்; ஆதலால் இதை பிரசுரித்திருக்கிறோம்.

ப-ர்.

"குடி அரசே"! குணக்குன்றே! உனதோராமாண்டு முடிவெய்தி ஈராமாண்டுதயமாகி, உனதுண்மை, அஞ்சாமை, சமத்வம், சகோதரத்வம் முதலிய அரும்பெரும் ஆசீர்வாதத்திற்குப் பாத்திரமாயுள்ள தமிழ ரொவ்வொருவரின் மடிமீது தவழ்ந்திலங்கி, நின் சமத்வ சங்கீதமும் விடுதலை வீணையும் அமிழ்தினுமினிய காந்தியடிகளாரின் கருணை சுரந்த ஞானோபதேசங்களையும் நின்னகத்தே தாங்கி வெளிக்கிளம்பிய ஈராமாண்டை விண்ணவரும் நன்னாளாகக் கருதி களிப்புறுவரெனின் எம்போன்றார் பூரித்துப் புளகாங்கித மெய்வதற்கு மட்டுண்டோ? நிற்க நினதோராமாண்டு ஆரம்பத்திலேயே, நீ கூறிவந்த கூற்றுக்கொப்ப நாட்டின் நலத்தை பாழ்படுத்தியும் பரமபிதாவாம் காந்தியடிகளாரின் ஒப்புயர்வற்ற, உயரிய கொள்கைகளைச் சிதைக்கவும் அப்பெருமானின் இருநேத்திரங்களன்ன அலி சகோதரர்கள் மனம் புண்படவும் ஓர் சில போலிகளால் ஸ்தாபிக்கப்பட்ட "ஸ்வராஜ்யக் கட்சி" எனும் பார்ப்பனக் கட்சி சொல்லொன்று செய்கை பிறிதொன்றுமான வஞ்சக நோய்வாய்ப்பட்டு உத்தியோகம், பட்டம், பதவிகள் என்னும் தத்துக்களால் மோதுண்டு சபர்மதி க்ஷேத்திரத்தில் செப்பனிட்டு வைத்துள்ள சவக்குழிக்கு பயணச்சீட்டு கெல்கர், ஜெயகர், நேரு முதலிய பார்ப்பனக் குழாங்களால் கொடுக்க, அப்புதைகளில் புகுந்த சுபச்செய்தியைக் கண்டு குதூகலிக்கும் உன்னோடு உண்மைத் தேசபக்த ரொவ்வொருவரும் கலந்துகொள்வார் என்பதென்னுறுதி.

குணம் மிகுந்த "குடி அரசே"! தற்கால ராஜீயவானம் காந்தியடிகள் என்னும், நிறைமதி சற்று ஒதுங்கி நிற்பதினிமித்தம் சிறிது இருண்டிருப்பதைக் கண்ட சில தாந்தோன்றிகள் காந்தி சிஷ்யர்கள் என்னும் கன்னக்கோல் கரத்திலேந்தி பாமர மக்களின் வழிமையில்லா மனக் கோட்டைகளை கன்னமிட்டு அம்மக்களின் மதிப்பில்லாப் பொருள்களாம் வாக்குரிமை போன்றவைகளை கவர்ந்த திருட்டின் கயத்தன்மையை தமிழுலகிற்கெடுத்தோதி எச்சரிக்கையாய் இருக்கச் செய்த பெருமை உனக்கே தகும், தகும், முக்காலும் தகும். ஸ்வராஜ்யக் கட்சியின் மணத்தால் மயிர் விரித்தாடும் பார்ப்பனர்களுக்கும் அவர் தம்பாத வருடிகளாம் நந்தமிழ்க் கொடாரிக் காம்புகளுக்கும் எம்மொழிகளால் இரங்குதல் கூறுவதென் றேங்குகிறேன்.

அன்பனே! சமத்துவ வீரனே! சகோதர வாஞ்சனே! தீண்டாமைப் பேயைத் திரிகரணசுத்தியாய் வெருட்ட கங்கணங் கட்டியுள்ள கருணைப்பிரதாபனே! காந்தியடிகளின் கருணையாம், ஞானோபதேசி "குடி அரசே!" குணக்குன்றே! நீ தோன்றிய ஓராண்டிலே நாட்டுக்குழைத்த நலன்களை நவிலவொன்றிலாகுமோ, நீ இயற்றிய பேருபகாரங்களை யுன்னி பூரித்துப் புளகாங்கிதம் எய்த ஒருவுளம்போதுமோ? நினதருமை பெருமையோடமைந்த தேசத் தொண்டை வருணிப்பதற்குரிய வாக்கியங்கள் கிட்டாது எனதேழைக் கல்வி திக்குமுக்காடச் செய்கிறது. உன் வளர்ச்சியே தேச வளர்ச்சி, உன் க்ஷேமமே தேச க்ஷேமம் என்பதுறுதி. இவற்றை தமிழுலகறிந்து இவ்வீராமாண்டில் தமிழர்களின் உயிர் நிலையாம் உன்னை ஏற்று போற்றி எங்கணும் உனது சமத்துவ சகோதரத்வ மணங்கமழச் செய்வார்கள் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. உன்னை பரிபக்குவமாய் பரிபாலித்து தேச மக்களின் துயர் தணிக்கவல்ல தூயதேசத் தொண்டாற்றி வரும் உனது அதிபரும் நந்தமிழ்நாட்டு மாபெருந்தலைவரும் தேசத்தொண்டின்றி பிறிதொன்றறியாப் பெரியாருமாம் ஸ்ரீயுத ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களுக்கு நீண்ட ஆயுளும் திடகாத்திரமும் கொடுத்துதவி ஸ்வராஜ்யமெனும் சாம்ராஜ்யத்திற் குழைக்க எல்லாம் வல்ல லோகநாயகி கிருபை பாலிப்பாளாக. ஓம் தத்சத்.

"குடி அரசு" வாழ்க. பாழும் வைதிகம் வீழ்க.

இப்படிக்கு,
காந்தி தாசன், தூத்துக்குடி.

---

### கோவில்பட்டி தாலூகா, காட்டுநாயக்கன்பட்டி க்ஷத்திரிய வித்தியாசாலை திறப்பு விழா.

கடவுள் திருவருட்டுணையால் மேற்படி வித்தியாசாலையின் திறப்பு வைபவம் நிகழும் 1101-ம் வருஷம் வைகாசி மாதம் 10-ந் தேதிக்குச் சரியான 1926-ம் வருஷம் மே மாதம் 23-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12-மணிக்கு மேல் 1-மணிக்குள்ளாக:—

திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டும் கவர்ன்மெண்டு வக்கீலுமான பாளையங்கோட்டை ஸ்ரீமான் திவான் பகதூர் S. குமாரசுவாமி ரெட்டியார் B. A., B. L. அவர்களால் நடைபெறும்.

அவ்வமயம் பல பிரமுகர்கள் அரிய உபன்யாசங்கள் நிகழ்த்துவார்கள்.

மு. பெ. மாரியப்ப நடார்,
சு. பொன்னு நாடார்.

## ஊழியர் கழகம், சிக்கல்.

—(○)—

அட்சய ஆண்டு வைகாசித் திங்கள், ஞாயிற்றுக் கிழமை 10ம் நாள் மே-மீ 23-டீ தினத்தில் "குடி அரசு" ஆசிரியர், ஈரோடு பேரறிவாளர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள்

கதர் வளர்ச்சியை முன்னிட்டு கூடும் கதர் மகாநாட்டில் தலைமை வகிப்பார்.

புகைவண்டி நிலையத்திலிருந்து அத்தினம் காலை மணி 9-15க்கு பட்டணப் பிரவேசம் நிகழும்.

யாவரும் வந்து சேரும் வண்ணம் கேட்டுக்கொள்ளும்,

சா. பாலசுப்பிரமணியம் பிள்ளை, அமைச்சர்.
சி. மே. பக்கிரியா பிள்ளை, தலைவர்.

### விஷய அட்டவணை.

அட்சய ஆண்டு வைகாசி ஞாயிறு 10-ம் நாள் 23—5—26-ல்

"குடி அரசு" ஆசிரியர் ஈரோடு உயர்திரு

ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள்

தலைமையின் கீழ் நடைபெறும் கதர் மகாநாட்டின்

### நிகழ்ச்சி விபரம்.

காலை 9-30 முதல் 12 மணி வரையில்

1. தலைவர் வரவேற்பு. 2. கடவுள் வணக்கம். 3. தேசிய கீதம். 4. அறிக்கை வாசித்தல். 5. தலைவர் முன்னுரை. 6. ஏழைகளுக்கு அன்னமளித்தல் ஆகியவைகள் நடைபெறும்.

மாலை 4 முதல் இரவு 8-மணி வரையில்,

1. தமிழ்நாட்டின் தற்கால நிலைமை என்பதைப்பற்றி அன்பர் திருமிகு வி. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும், 2. கதர் வளர்ச்சி என்பதைப்பற்றி ஸ்ரீமதி இராமாமிருதத்தம்மாளும், 3. தமிழ்மொழி என்பதைப்பற்றி தொழிலாளர் திரு. குமாரசாமி செட்டியார் அவர்களும் உபந்யாசிப்பார்கள்.

பின்னர் தலைவர் முடிவுரை வந்தனமளித்தல் இவைகள் நடைபெறும்.

திருமிகு. நாயக்கர் மறுநாள் மாலையில் நாகை தென் இந்திய ரயில்வே தொழிலாளர் மன்றத்தில் தொழிலாளர்களுக்காக ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்.

---

### நாகைபட்டணம் ரயில்வே தொழிலாளர் சங்கம்

நாளது 1926-வருஷம் ஜுன்-மாதம் 19, 20-தேதிகளில் நமது சங்கத்தின் வருஷோற்சவமும் மகாத்மா காந்தி—காலஞ்சென்ற எங்கள் தலைவர் உயர் திரு. வெ. ப. பக்கிரிசாமிப் பிள்ளை, இவர்களின் உருவப் படங்களின் திறப்பு விழாவும் நடைபெறும். அதுகாலை பல தொழிலாளர் தலைவர்கள் அரிய உபன்னியாசம் செய்வார்கள். பல தலைவர்களுக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்கள் வரவை எதிர் பார்க்கப்படுகின்றது என்று காரியதரிசி திரு. டி. கிருஷ்ணசாமி நமக்கு தெரிவிக்கிறார்.

---

### கருங்கல்பாளையம் பெண் பாடசாலை பரிசளிப்பு விழா.

இவ்விழா முனிசிபல் சேர்மன் திரு. T. சீனிவாச முதலியார் அக்கிராசனத்தின் கீழ் வெகு விமரிசையாய் நடத்தப் பெற்றது.

## மதிப்புரை.

### "ஆனந்த விகடன்."

இக்கனத்தலே யுலகில் வாழ்வாரனைவருக்கும் நல்லறிவுச் சுடர்கொளுத்தும் முறைகளில் "விகடம்" ஓர் சிறந்தமுறையாகும். விகடத்தினால் ஆழ்ந்த கவலையுடையோரையும் பேரானந்தமுறச் செய்யலாம். இக்கருத்துக் கொண்டே பண்டைநாளில் அரசர்களுக்குக் கவலைவந்த நேரங்களில் சந்தோஷிக்கச் செய்வதன் பொருட்டு விதூஷகர்களை அரசர்கள் ஆதரித்து வந்தனர்.

இத்தகைய விகட நடையில் மக்களுக்கு அறிவு விளக்கமுறச் செய்வதற்குப் பத்திரிகையுலகத்திலும் பல நிலவவேண்டுமென்பதை ஒருவரும் மறுக்கார்.

இந்நோக்கங்கொண்டு திரு இ. கோவிந்தராஜுலு நாயுடு "ஆனந்தவிகடன்" என்னும் பெயருடன் மாதப் பத்திரிகையொன்று பல சிறந்த கட்டுரைகளுடன் வெளியிட்டுவருவதை ஆதரிக்க வேண்டியது தமிழரது கடமைகளிலொன்றாகும். நமக்கு அனுப்பப் பட்டுள்ள முதலாம் 'குலை' மூன்று 'காய்' களிலுள்ள கல்வி, சமயம், சமத்துவம், வைத்தியம், வேதாந்தம் முதலியவைகளைப்பற்றிய கட்டுரைகள் நமக்கு உவகை அளித்தன.

40 பக்கங்கள் கொண்டது. வருட சந்தா ரூ. 2—0—0.

"ஆனந்த விகடன்" ஆபீஸ்,
சௌக்கார்பேட்டை, சென்னை.

### "செல்வக் களஞ்சியம்"

மதுரை வைத்திய பூபதி திரு ஆர். எஸ். பதி அவர்களால் வெளியிடப்பெறும் "செல்வக் களஞ்சியம்" என்னும் மாதவிதழின் முதல் இரண்டு பகுதிகளும் வரப்பெற்றோம். இதன் வருட சந்தா ரூ. 1. இப்பத்திரிகை அரசியல் முறையில் அளவுக்கு மிஞ்சிச் செல்லாமல் சித்த வைத்தியம், சிறந்த சன்மார்க்கம், உழவு-நெசவுத்தொழில், முதலிய விடயங்களில் தலையிட்டுழைக்குமெனத் தெரியவருகிறது. "சாதிசமயச் சண்டைகளில் ஈடுபடாமல் நாட்டார் யாவரும் பொது நல வாழ்க்கையிற் சமநிலையடையும் வழிகளிலும் ஆசார சீர் திருத்த முறையிலும் தாராளமான மனங்கொண்டும், ஏழைமக்களுக்கும் இழிந்தோரெனத் தூற்றப்படுவோருக்கும் இருகைபோன்று துணை புரியும்," என்று இதன் ஆசிரியர் குறித்திருக்கு முறையில் சிறிதும் வழுவாது என்ஞான்றும் நடந்துவரவேண்டுமென்பது நமதுவிருப்பம். தமிழர் இக் "களஞ்சிய"த்தை ஆதரிப்பாராக.

"செல்வக் களஞ்சியம்" நிலயம்,
மேலக்கோபுர உட்புறம், மதுரை.

### ஆரோக்கிய சேனன்.

மானிட தேகியாரம் மாசுபடாமலிருந்தாலன்றி அதினாலுலகிலிருந்தும்பயனில்லை. ஒருவனுக்குதிரண்ட செல்வமும்நிறைந்த கல்வியும் யௌவன மனைவியுமிருந்தும் சரீர ஆரோக்கியம் இல்லாதிருக்குமேயானால் அவன் அவைகளால் நுகரவேண்டிய இன்பமனைத்தையும் இழந்தவனாகின்றான். ஆகவே தேக ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டியது மனிதனின் முதற்கடமையாகும். நகரம் நாட்டுப்புறங்களில் வசிக்கும் மக்கள் அனைவரும் ஆரோக்கிய மாயிருக்கவேண்டிய வழிகளைச் செவ்வனே அறிந்து அதன் வழி யொழுகுதல் பொருட்டு நாடக ரூபமாக "ஆரோக்கிய சேனன்" என்னும் பெயருடன் திரு. எஸ். ஆர். துரைசாமி நாயுடு சிறு நூல் ஒன்று எழுதியுள்ளார். இப்புத்தகத்தை இளஞ்சிறார்களுக்குப் பாடப்புத்தகமாக வைக்கலாம். தெளிவாகவும் எளிய நடையிலும் சிறந்த கருத்துக்களுடன் எழுதப் பெற்றிருக்கிறது. இதன் விலை அணா 6.

கிடைக்குமிடம்:—

எஸ். கே. சென்னகேசவலு செட்டியார்,
கன்ட்ராக்டர், சங்ககிரி.

### "தொழிற் கல்வி."

---

திரு. எ. ராமசாமி ஐயரை ஆசிரியராகக் கொண்ட "தொழிற் கல்வி" என்னும் மாதத்தாளின் முதல் பிரதி வரப்பெற்றோம். இப்பத்திரிகை நாட்டின்முன்னேற்றத்திற்கு அடிப்படையாயுள்ள கைத்தொழில், விவசாயம் ஆகிய தொழில் முறைகளைப்பற்றிய பல அரிய பெரிய வியாசங்களையுடையதாயிருக்கிறது. வினா—விடை மூலமாக இதிற்காணப்பெறும் விஷயம் பலருக்கும் தெளிவாய் எடுத்துக் கூறுவதாயிருக்கிறது. இதன் சந்தாவைக் குறைத்தால் எளியோரும் படித்துணர நலமாயிருக்கும்.

வருடசந்தா ரூ. 4—0—0.

"தொழிற் கல்வி" ஆபீஸ்,
கௌதமன் கம்பெனி,
திருவிடைமருதூர். S. I.


## பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

### (1) மகா சந்தனாதித் தைலம்.

இத்தைலம் மிகச் சிறந்த தொன்றென்றே கூறவேண்டும். தமிழ் சித்த வைத்தியத்திற்காக அரும் பாடுபட்டு வரும் திரு. ஆனந்தரால் பல கந்த மூலிகைகளின் சத்தைக்கொண்டு செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. இத்தைலத்தை நாம் உபயோகித்துப் பார்த்த அளவில் கண்களுக்கு மிகுந்த குளிர்ச்சியையும், சுருசுருப்பையும், உற்சாகத்தையும் அளிக்கக்கூடியதாயிருக்கிறது. நல்ல, குளிர்ந்த, இனிய வாசனையுடையதாகவுமிருக்கிறது. இத்தைலத்தை பெரும் பிரபுக்கள் பலர் உபயோகித்து வருவதாகத் தெரிகிறது.

### (2) பூ எண்ணெய்.

தமிழ் நாட்டிலே சிறந்த பிரமுகர்களிடம் மிகப் பல நற்சாக்ஷிப் பத்திரங்களும் மெடல்களும் பெற்ற வைத்திய நிபுணர்களில் பண்டித எஸ். எஸ். ஆனந்தரும் ஒருவர் என்பது நமது கருத்து. இவரால் நமது பார்வைக்கு அனுப்பப் பெற்ற ஆனந்தா ஹேராயில் என்னும் பூ எண்ணெயை உபயோகித்துப் பார்த்தோம். இதுவும் இனியமணங்கமழும் ஓர் சிறந்த தைலமாகும். குளிர்ந்த வாசனையும், இனிய மணமும், சிறந்த குணமுமுடையதாயிருக்கிறது. சிரரோகங்களான பொடுகு, சொறி சிரங்கு, முதலியவற்றை அறவே ஒழிக்கு மென்பதாகவும் அவரது குறிப்பிலிருந்து அறிகிறோம்.

### (3) கல்நார் பற்பொடி.

முன் குறிப்பிட்ட சென்னை, தமிழ் சித்த வைத்தியர் பண்டித ஆனந்தரது கல் நார் பற்பொடியை உபயோகித்துப் பார்த்ததில் வாய் நாற்றம், வழ வழுப்பு முதலியவற்றை நீக்குவதோடு பற்களையும் நன்கு சுத்தப்படுத்துகிறது. இது பல தந்தரோகங்களைப் போக்கக் கூடியதென பண்டிதர் கூறுகிறார்.

சந்தனாதித் தைலம் 6 அவுன்ஸ் ரூ. 1—3—0
பூ எண்ணெய் குப்பி 1-க்கு 1—0—0
கல் நார் பற்பொடி டப்பி 1-க்கு 0—6—0

கிடைக்குமிடம்:—

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு,
சுமைதாங்கிக்கு வடக்கு, சென்னை.


### நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

#### தலைவர்களின் சுற்றுப் பிரயாணம்.

நாடார் மஹாஜன சங்கம் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரி சீட்டின் விற்பனையை நோக்கி, மேற்கு வட்டகையில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக, சங்க மோட்டார் வாகனத்தில், 11-5-26-உ காலை சூரியஉதய நேரத்தில் காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாலஞ்டிய நாடார் அவர்களும், டிராவலிங் ஏஜண்டு ஸ்ரீமான் எஸ். ஆர். மூக்க நாடார் அவர்களும், வாலிப நாடார் சங்கம் பிரஸிடெண்டு ஸ்ரீமான் ஆ. பகூஷ நாடார் அவர்களும் புறப்பட்டு சென்றிருக்கிறார்கள். 30-6-26ல் பிரைஸ் எடுக்கப் பெறுமென்பது நிச்சயம்.

ஆங்காங்குள்ள அபிமானிகள் ஆதரித்து ஏராளமான சீட்டுகள் பெற்றுக்கொண்டு தாமதிக்கச் செய்யாது அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். காரியதரிசி.

---


பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெய்யில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும், ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 2—4—0
6-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1—3—0

தமிழ் மருத்துவ சாலை,
220, தங்சாலைத் தெரு, சென்னை.


---


## சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த தேசீயத் தமிழ் மாதப் பத்திரிகை.

அதிகாரமும், அகங்காரமும், பணத்திமிரும், ஜாதி இறுமாப்பும் படைத்துள்ளவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துத் திருத்திப் பாரத உலகத்திலே சமத்துவத்தை நிலைநாட்டுவான் பொருட்டு போராடுதற்கென, அக்ஷய-ஹூ 1-ந் தேதியிலிருந்து வெளிவருவது; ஒவ்வொரு தமிழ் மக்களாலும் ஆதரித்துப் போற்றத்தக்கது.

வருடசந்தா தபாற்செலவுடன் ரூ- 2.

வீ. அருணசலம்,
நெ. 52. செட்டித்தெரு, கொளும்பு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

(5) நமது நாட்டின் தற்கால நிலைமையில், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அவசியமானதா? இல்லையா? பின்னிட்ட தாழ்த்தப்பட்ட ஜாதியாரின் உரிமையைக் காப்பதற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைவிட வேறு வழியென்ன?

(6) வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அவசியம் என்றால், அதைக் கொல்ல முயலும் அய்யங்கார் கட்சியில் நீங்கள் இருப்பதேன்?

(7) பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வர்ணாஸ்ரம தருமத்தை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? மனு தர்ம சாஸ்திரப்படி சகலஜாதியார்களுக்கும்நியாயம் கிடைக்குமா?

(8) பார்ப்பனர் மற்ற சாதியார்களைவிட உயர்ந்தவர்கள், புத்திசாலிகள் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? அவர்களுக்கு சமூக வாழ்விலும் இராஜீய துறையிலும் முதன்மைஸ்தானம் இருக்க வேண்டியது அவசியமா?

(9) அரசியலிலும், சர்க்கார் உத்தியோகங்களிலும், பார்ப்பனரல்லாதார் அவர்கள் எண்ணிக்கைக்கு தக்கபடி அடைய வேண்டிய யோக்கியதையையும் பொறுப்பையும் தற்போது அடைந்து வருகிறார்களா? இல்லாவிட்டால் அவர்கள் சம உரிமை பெற வழி யென்ன?

(10) நம் மந்திரிகள் கொண்டுவந்த வகுப்புவாரி உத்திரவு (Communal G. O.) நியாயமானதா? இங்கிலீஷ்காரர் இதுவரை பார்த்துவந்த உத்தியோகங்களையெல்லாம் இந்தியர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்கும், பார்ப்பனர் பார்த்துவரும் உத்தியோகங்களை, எல்லா ஜாதியார்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று நம் மந்திரிகள் கேட்பதற்கும் வித்தியாசம் என்ன?

(11) தீண்டாமை யொழிய வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறீர்களா? தீண்டாமை ஒழிப்பதற்கு உங்கள் கட்சிக்காரர் என்ன செய்திருக்கிறார்கள்?

(12) தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கும் பெருந்தடையாயிருப்பவர்கள், பார்ப்பனர் என்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? கல்பாத்தி, கமாலாபுரம் சம்பவங்களிலிருந்து என்ன அறிகிறீர்கள்?

(13) தேவஸ்தான சட்டத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? ஆதரிப்பீர்களானால், அச் சட்டத்தை ஒழிக்க இராப்பகலாய் பாடுபடுகின்ற அய்யங்கார் தலைமையை ஒப்புக்கொண்டது நியாயமாகுமா?

(14) சமீபத்தில் சபர் மதியில் நடந்த இராஜியின்படி, சுயராஜ்யக் கட்சியார், பேருக்குச் சிலநிபந்தனைகளைச் சொல்லி, உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளலாம் என்று ஏற்பட்டுப் போனதால் உங்கள் கட்சிக்கும், மற்ற கட்சிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஒத்துழையாமை, முட்டுக்கட்டை போடுவது எல்லாம் எங்கிருக்கிறது?

கோவை,—அ. கிருஷ்ணசாமிசெட்டி B. A.

# இதில் யார் கெட்டவர்கள்

## அரசாங்கத்திலும் காங்கிரஸிலும் ஒரே நடைமுறைதான்.

—o—

காங்கிரஸ் தோன்றியதும் அதன் கொள்கையிலிருந்து மிதவாத, தேசிய, சுயராஜ்ய, திராவிட, சுயஆக்ஷி, ஹிந்து, மகஜன முதலிய கக்ஷிகள் தோன்றி ஒவ்வொருவர்களும் இந்நாட்டிற்கு சுதந்திரம் வேண்டும், சுய ஆக்ஷி வேண்டும், விடுதலை வேண்டும், பொறுப்பு வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகிறார்கள். இவை எதற்காகவென்றால், அரசாங்கத்தார் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. மேலும் ஆக்ஷி முறை கொடுங்கோலாகவுள்ளது; அரசாங்க சட்ட புஸ்தகத்தில் அநாகரிகச் சட்டங்களாகிய ஆள்தூக்கிச் சட்டம், வாய்பூட்டு சட்டங்களும், பேசும் சுதந்திரம், எழுதும் சுதந்திரம், கூடும் சுதந்திரம் முதலியவைகளை தடுக்கும் சட்டங்களும், சீர்திருத்த சட்டத்தில் ஜனப்பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களை உதறித்தள்ள சர்டிபிகேட் ஆக்ட் என்னும் அதிகார பத்திரச் சட்டங்களும் உள்ளதால் நமது கஷ்டங்கள் தொலைய நாம் சட்டம் செய்துகொள்ள முடியவில்லை என்பதை ஒவ்வொரு கட்சியாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் யாவரையும்விட நாங்கள் நல்ல பிள்ளைகள், தேசபக்தர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனசுயராஜ்ய கட்சியோ காங்கிரஸை பிராமண ராஜ்யமாக செய்துகொண்டு வருகிறார்கள் என்பதற்கு சிலஉதாரணங்களை கீழே காட்டுகின்றேன். அரசாங்தார் வாக்குறுதி மீறினார்கள்; சுயராஜ்ய கட்சியாரும் சட்டசபை செல்லுங்கால் கொடுத்த வாக்குறுதி மீறிவிட்டார்கள். அரசாங்கத்தில் வருவாய் ஆகும் தொகையில் ராணுவத்திற்கு ஒதுக்கியதுபோக மிகுதியைத்தான் நிர்வாக நிர்மாண செலவுகளுக்கு எடுத்துக்கொள்ளுகிறது. அதைப்போலும் பாட்னா, கான்பூர் ஒப்பந்தங்களுக்கு மீறி தீண்டாமை விலக்கு நிதிகளிலிருந்தும், கட்டட நிதிகளிலிருந்தும், கதர் போர்டு நிதிகளிலிருந்தும் பணத்தை எடுத்து தேர்தல் பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்கள். இவர்களின் அடாத செய்கைகளைக் கண்டிக்கும் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலியவர்களையும் என் போன்றவர்களையும் காங்கரஸிலிருந்து பலாத்காரமாய் விலக்க வேண்டி மதுரையில் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களைப் பாருங்கள். அத்தீர்மானங்கள் அரசாங்கக் கொடுங்கோல் சட்டம் என்று சொல்லப்படும் சட்டங்களுக்குக் குறைவுள்ளதா என்று பாருங்கள்.

மகாயுத்தத்தில் உதவி செய்த இந்தியர்களுக்கு அரசாங்கத்தார் ரௌலட் சட்டமும் பஞ்சாப் படுகொலையும் பரிசாகக் கொடுத்தார்கள் சுயராஜ்யக் கட்சியார் ஒத்துழையாமையில் ஈடுபட்டு சிறைசென்று கஷ்டப்பட்டவர்களை காங்கரசினின்று துரத்துவதற்கும் சட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால்ஒருவித்தியாசம் தெரிகிறது. அரசாங்கத்தாராவது உண்மையைச் சொல்லி தங்கள் நிர்வாகத்திற்கு இடைஞ்சலின்றி இச் சட்டங்கள் தேவை என்று சொல்லுகின்றார்கள். ஆனால் நமது பார்ப்பன சுயராஜ்ய கட்சிக் காரர்களோ உண்மைக்கு விரோதமான வார்த்தைகளைக் கட்டுப்பாடு என்று சொல்கின்றார்கள். "பொய்யுடைய ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என்று ஆன்றோர்கள் சொல்லிப் போனதை சுயராஜ்யக் கட்சியார் காரியத்தில் காட்டுகின்றார்கள்.

இதுவரையிலும் அரசாங்கத்தை சுத்தியமைத்தான், சுயராஜ்யக் கட்சியையும் பிடித்துக் கொண்டதைச் சொல்லிவந்தேன். இனி ஜஸ்டிஸ் கட்சிக் காரர்களுக்கும் சுயராஜ்யக் கட்சிக்கும் உள்ளதைச் சொல்லுகின்றேன்.

இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி சாட்டப்படும் குற்றத்தில் முதன்மை ஸ்தானம் வகிப்பது ஹிந்துமதஸ்தாபன போர்ட்டின் கமிஷனரான ஸ்ரீமான் நடராஜ முதலியார் கமிஷனராகவும், கார்பொரேஷன் கவுன்சிலராகவும் பச்சையப்பன் தர்மஸ்தாபன போர்டு டிரஸ்டியாகவுமிருப்பது பொருத்தமுள்ளதா என்று கேட்கப்படுகின்றது. ஆனால் மதஸ்தாபன போர்டின் அங்கத்தினர் அதில் சம்பந்தப்படாத ஒரு சொத்தின் தர்மகர்த்தாவாக இருப்பதில் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இவ்வித பழக்கம் வெகுகாலமாக இருந்துகொண்டு வருகின்றது.

ஏற்கனவேயுள்ள சர்க்கிள் தேவஸ்தான கமிட்டி அங்கத்தினர்கள் ஒவ்வொருவர்களும் இவர்கள் சம்பந்தமில்லாத இதர சர்க்கிளுக்குள்பட்ட கோவில்களில் டிரஸ்டியாக இருந்துகொண்டு வருகின்றார்கள். சுயராஜ்ய கட்சியாரும் அவ்வித விருத்திக்கு கட்டுப்படவில்லையா? உதாரணமாக சீனிவாசய்யங்கார் சென்னை சுயராஜ்ய கம்பெனியில் சம்பந்தமுள்ளவர். அதற்குக் கடன் கொடுத்திருக்கும் மாகாண காங்கரஸ் கமிட்டியிலும் சுயராஜ்யக் கட்சியிலும் தலைமை வகிப்பதும் எந்த சட்டத்தைக்கொண்டு என்பது தெரியவில்லை. கடன் வாங்கியதற்கு பொறுப்பாயுள்ள வரிடமே கடனை வசூலிக்க வேண்டிய பொறுப்பை விடுவது என்ன நியாயம். சென்னை நிர்வாக சபையிலுள்ள ஓர் அங்கத்தினர் தனக்கு சொந்தமுள்ள கம்பெனி ஒன்றுக்கு அரசாங்க பணத்தை அள்ளிக் கொடுத்ததாக சொல்லப் படுவதைப்போல் சீனிவாசய்யங்காருக்கு சொந்தமான சுயராஜ்யா கம்பெனிக்கு காங்கரசின் பணத்தில் பதினாயிரம் ரூபாய் மோசம் செய்யப் படுகின்றது. இவர் இப்பதவிகளை வகித்து இவ்விதம் மோசம் செய்வதைக் காட்டிலும் சம்மந்தமில்லாத மூன்று பதவிகளை நடராஜ முதலியார் வகிப்பது மோசமா என்று கேட்கிறேன். இன்னும் இதைப் போல் பல மோசடிகளை அடுத்த வியாசத்தில் காட்டுகின்றேன்.

தோழர்களே, இவ்விதமெல்லாம் புரட்டு செய்யும் பார்ப்பன சுயராஜ்ய கட்சியாரின் வலையில் சிக்காதீர்கள்! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!! தேசத்தில் ஜனநாயகம் வளர்க்க வேண்டுமானால் சுயராஜ்ய கட்சியை பகிஷ்கரித்து பிராமணர் அல்லாதார் பலமானபிரசாரம் செய்து பார்ப்பனசூழ்ச்சியை அழிக்க வேண்டும் நண்பர்களே விழித்தெழுங்கள்.

நா. வீ. கல்யாண சந்தரன்.

ஆயிரக்கணக்கான் நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தய்லமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிவப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,
செப்பக்குளம் போஸ்ட் திருச்சிரப்பள்ளி.

## பிரமேக குல சம்ஹாரி.

பலவித காந்தித் தடிப்புகள், 21 வித மேகரோகம், 7-வித வெள்ளைரோகம், ரணம் ஆரையாப்பு, சூலை, வாத முதலிய தீராத கொடிய ரோகங்களையும் ஒக்கே தினத்தில் நீக்குகிறது. புட்டி 1-க்கு ரூ. 2. ஏஜண்டுகள் தேவை. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,
திருச்செங்கோடு. (தென் இந்தியா)

## "ஐஸ்வரிய இரகசியம்"

என்னும் புத்தகம் முற்றிலும் இனாம்!

ஐஸ்வரியம் அடையும் இரகசியத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. உடனே எழுதுங்கள்.—மறந்துவிடவேண்டாம்.

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
25, தெப்பக்குளம், திருச்சி.

## குடி அரசு பத்திரிகை.

கிடைக்குமிடம்:—

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள ஹிக்கின் பாதம்கம்பெனி புஸ்தக சாலைகளிலும்
கோயமுத்தூர்—ஸ்ரீ எ. ஆர். சிவானந்த முதலியார்
சேலம்—ஸ்ரீ ராமாநுஜ புக்டிபோ
திருப்பூர்—ஸ்ரீ என். ராமசாமிநாயக்கர் மானேஜர் காந்தி கதராலயம்
திருச்சி—ஸ்ரீ எஸ். மாசிலாமணி பிள்ளை, திருச்சிக்கோட்டை.
கும்பகோணம்—ஸ்ரீ கா. கு. நீலமேகம் பிள்ளை, சுருட்டு வியாபாரம், பெரியகடைத்தெரு.
திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன், தேசாபிமான சங்கம்.
நாகபட்டணம்—ஸ்ரீ எ. சக்கரபாணி பிள்ளை, கன்னாரப்பட்டரை.
மதுரை—கியூஸ் ஏஜண்டு, கலினிய பஜார்,
விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.
மதராஸ்—கியூஸ் அண்டு அட்வர்டைசிங் ஏஜண்டு, நெ. 31 நம்லையர் வீதி
கோலார்—ஸ்ரீ ப. மு. ராஜரத்தினம் சித்தார்த்த. புஸ்தகசாலை சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்டு.
தூத்துக்குடி—கியூஸ் ஏஜண்டு.
ஈப்போ—ஸ்ரீ எம். என். பிள்ளை C|o போர்னியோ மோட்டார் (லிமிடெட்.)
சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அண்டு அமெரிக்கன் கியூஸ் ஏஜன்சி நெ. 6 பேட்டரி ரோட்
மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

## உண்மையான கதர்! கெட்டியான கதர்!

—:O:—

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடை பெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.)

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## மாலினி.

மிகு ரசகியமான ஓர் கதை. இப் புஸ்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் முக்கியாவசியமானது. இதில் பொறுமை, சாந்தம், நல்லொழுக்கம், அடக்கம், அன்பு, கற்பு, நட்பு முதலிய அரிய பெரிய விஷயங்களை அசட்டை செய்பவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கே இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும். புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள்.

அநங்கதிலக ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது — ரூ. 64,600,
வசூலிக்கப்பட்டது — ரூ. 35,540.
டிபாசிட்டுகள் — ரூ. 42,012-14-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

ஷை. பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. ஏனெனில் 10-2-26-௳ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாய்க்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குவரத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமகா இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாசிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
10—2—26. மானேஜிங் டைரக்டர்

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.